

## பௌசி மீண்டும் பாராளுமன்றுக்கு

02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 156 சுபகிருது வருடம், தை மாதம் 12ஆம் திகதி வியாழக்கிழமை (26.01.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 03, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.60



## உஷ்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் எம்.பி. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, வர்த்தக அமைச்சுப் பொறுப்பை தருமாறு ஜனாதிபதி ரணிலிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல். ஆனால், அதனை இப்போதைக்கு ஜோன்ஸ்டனுக்கு வழங்கும் தீர்மானம் ரணிலிடம் இல்லையாம். அரசுக்கு ஆதரவு தெரிவித்து உள்ளே வரவுள்ள அரசியல் கட்சியொன்றின் தலைவருக்காக அதனை ஒதுக்கி வைத்துள்ளாராம் ரணில்.




# பெருந்தொகை பணத்துடன் ஏ.ரி.எம். இயந்திரம் கொள்ளை

### வேனில் வந்த திருடர்கள் கம்பளையில் கைவரிசை; கைகள் கட்டப்பட்ட நிலையில் சாரதி மீட்பு

•நா.தினுஷா

தனியார் வங்கியொன்றுக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் குழு, கடமையிலிருந்த பாதுகாப்பு அதிகாரியின் தலையில் துப்பாக்கி வைத்து அச்சுறுத்தல் விடுத்து அவரை கதிரையொன்றில் கட்டிவிட்டு, அங்கிருந்த பணம் வைப்பிலிடும் இயந்திரத்தை உடைத்தெடுத்துக்கொண்டு வேனில் தப்பிச்சென்ற சம்பவமொன்று நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கம்பளை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்ட வங்கியின் முன்னால் வந்த கே.டி.எச். வகையைச் சேர்ந்த அதிசொகுசு வேன்,.....

02 பக்கம்

# சுயாதீன குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள்

### அரசியலமைப்புப் பேரவை நேற்றுத் தீர்மானம்

நமது நிருபர்

அரசியலமைப்பு பேரவைக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களின் பிரகாரம் சுயாதீன ஆணைக் குழுக்களுக்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கு பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தின்போது பேரவை தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக குறித்த ஆணைக்குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு...

02 பக்கம்



# கருவுக்கு உயரிய விருது

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு



முன்னாள் சபாநாயகர் தேசபந்து கரு ஜயசூரிய, இலங்கையில் உயரிய தேசிய விருதான ஸ்ரீ லங்காபிமானய விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் எதிர்வரும் 03ஆம் திகதி இடம்பெறவிருக்கும் விருது வழங்கும் வைபவத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த விருது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

# வரி வசூலிப்பு சட்டத்தை திருத்தும்வரை போராட்டம்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு



•கே.சுபானி

"அரச மருத்துவ அதிகாரிகள் சங்கப் போராட்டம் முடிவடையப்போவதில்லை. அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள வரி வசூலிப்பு சட்டத்தை மீள திருத்தி ஒரு சாதாரண சட்டமாக கொண்டுவரும் வரை தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்படும்" - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

02 பக்கம்

# சுதந்திர தினம் கறுப்பு நாள்

### எதிர்ப்பை வெளியிட சாணக்கியன் அழைப்பு



•நா.தினுஷா

நாட்டுக்கு இன்னும் உண்மையாக சுதந்திரம் கிடைக்கவில்லை. சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கான நிலைமையும் நாட்டில் இல்லை.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

இலங்கை அரசியலில நடக்கிற தில்லுமுல்லுகளையெல்லாம் வடிவா தொகுத்தால், தேர்தல் இழுத்தடிப்பு முயற்சிகள் எண்டு ஒரு புத்தகமே எழுதிடலாம் போல என்னங்கோ...!



# சுதந்திர நூற்றாண்டு பயணத்தில் இரு நாடுகளும் கைகோர்க்க வேண்டும்

### இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவிப்பு



சுதந்திரத்தின் நூற்றாண்டு விழாவை இந்தியா 2047இலும் இலங்கை 2048 இலும் கொண்டாடவுள்ள நிலையில் இலங்கை, இந்திய நாடுகள் ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிக முக்கியமென இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

02 பக்கம்

# ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் இன்று

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் சர்வகட்சிக் கூட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும், இந்த சர்வகட்சிக் கூட்டத்தில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன,...

02 பக்கம்

## சுதந்திர தினத்தன்று கொழும்பில் போராட்டம்

மின்கட்டண மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு, பயங்கரவாத தடைச்சட்டம், புனர்வாழ்வளிப்பு சட்டம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகேவை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் எதிர்வரும் 04ஆம் திகதி சுதந்திரத் தினத்தன்று ஆர்ப்பாட்டம் செய்ய தீர்மானித்திருப்பதாக பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

சுதந்திர தினத்தன்று கொழும்பில் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உள்ளிட்ட ஒருசில...

02 பக்கம்

# மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதா இல்லையா?

### சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற ஆணைக்குழு தீர்மானம்



மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு விரைவில் அனுமதி வழங்குவதற்கும், கடந்த காலத்துக்கும் ஏற்புடைய வகையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளதா என்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு...

02 பக்கம்

# மின்சார சபை நட்டத்துக்கு அரசியல்வாதிகளே காரணம்

### அமைச்சர் காஞ்சன முட்டாள்தனமான தீர்மானம் மேற்கொள்வதாக ஜனக ரத்நாயக்க குற்றச்சாட்டு



•நா.தினுஷா

அரசியல்வாதிகளின் தனி தீர்மானங்களினாலேயே மின்சார சபை இன்று நட்டத்தை சந்தித்திருக்கிறது. மின்சார விநியோகம் தொடர்பில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர முட்டாள்தனமான தீர்மானங்களை எடுக்கிறார்.

02 பக்கம்

# தேர்தல் செலவினம் பற்றி கருத்துச் சொல்ல முடியாது!

### மத்திய வங்கியின் ஆளுநர் மறுப்பு



•கே.சுபானி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செலவினம் குறித்து கருத்துகள் எதுவும் தெரிவிக்க முடியாதென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க திட்டவட்டமாக மறுத்தார். மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற எதிர்கால திட்டமிடல்கள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே ஆளுநர் இவ்வாறு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# உயர்தரப் பரீட்சை முடியும்வரை மின்வெட்டு அமுலில் இருக்காது

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவிப்பு

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவடையும் வரை மின்சாரத்தை தடையின்றி வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

மின்சக்தி, வலுசக்தி அமைச்சு, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் அதிகாரிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர்.

உயர்தரப் பரீட்சை முடிவடையும் வரை தடையின்றி மின்சாரத்தை வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, உரிய தரப்பிடம் கோரியுள்ளது. இதற்கு, உரிய தரப்பினர் இணங்கியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வரை தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம், உரிய தரப்பினர் இணங்கியுள்ளனர்.

### ஜனாதிபதி தலைமையில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் உட்பட பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவியேற்ற பின்னர், 2022 டிசம்பர் 13ஆம் திகதி நடத்தப்பட்ட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டு கட்சித் தலைவர்களின் இணக்கப்பாடு இந்தக் கூட்டத்தில் எட்டப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

### சுதந்திர தினத்தன்று...

அரசியல் கட்சிகள், வர்த்தக சங்கங்கள், சிவில் அமைப்புகள் என்பனவும் சுதந்திரத் தினத்தன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சுயாதீன குழுக்களுக்கு...

ஆர்வம் காட்டும், தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு இணக்கம் காணப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டம் சபாநாயகரும் அரசியலமைப்புப் பேரவையின் தலைவருமான மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரிய வசம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத அங்கத்தவர்களான கலாநிதி பிரதாப் இராமானுஜம், கலாநிதி தில்குஷி அனுல விஜேசுந்தர, கலாநிதி தினேஷா சமரரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர். அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாஷிம் தவிர்க்க முடியாத காரணத்தினால் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது என அறிவித்திருந்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக, பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

அரசியலமைப்பு உள்ளிட்ட சட்ட ஏற்பாடுகளின் ஊடாக அரசியலமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பேரவையின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அரசியலமைப்பின் 41 ஆ பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்களை ஸ்தாபிப்பது தொடர்பில் அரசியலமைப்புப் பேரவை கலந்துரையாடியிருந்ததுடன், பத்திரிகை விளம்பரங்களின் ஊடாக குறித்த ஆணைக்குழுக்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு ஆர்வம் காட்டும் மற்றும் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரி பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்படும். விண்ணப்பங்களை மேற்கொள்வதற்கு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வாரகாலம் அவகாசம் வழங்கப்படும்.

மேலும் விண்ணப்பிக்கும் முறை தொடர்பில் மேலதிக தகவல்கள் பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக அறிவிக்கப்படும்.

பேரவையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை சுதந்திரமான முறையிலும், பொறுப்புடனும், வெளிப்படைத் தன்மையுடனும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசியலமைப்புப் பேரவை ஏகமனதாக இணங்கியது.

### தேர்தல் செலவினம்...

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

தேர்தலுக்கான செலவினம் குறித்து என்னால் கருத்து தெரிவிக்க முடியாது. செலவினங்கள் திறைசேரியின் பொறுப்பில் இருக்கின்றன. அரசாங்கத்தால் கோரப்படும் செலவினத்தை திறைசேரி கொடுக்க வேண்டும்.

இவ்வருடத்தில் பண வீக்கத்தை குறைப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். எதிர்வரும் காலத்தில் பண வீக்கத்தை நான்கு வீதமாக பேணுவதே எமது நோக்கமாகும். கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன.

சீனா மற்றும் பாரிஸ் கிளப் ஆகியவற்றுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின் பின்னர் நாட்டின் நிலைமை சீராகும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

### சுதந்திர நூற்றாண்டு...

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே இந்திய உயர் ஸ்தானிகர் இதனை தெரிவித்தார்.

'நல்லிணக்கத்தின் ரிதம்' என்ற பெயரில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு இந்தியாவின் நாகலாந்து பிரதேசத்தில் உருவான உலகப் புகழ்பெற்ற UDX இசைக்குழுவும் இலங்கை Heavy metal Quintet Band Stigmata இசைக்குழுவும் இணைந்து இந்த இசை நிகழ்ச்சியை நடத்தின.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவு, சமாதானம் மற்றும் சபீட்சம் என்பன தொடர்பிலான இருநாட்டு எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் இரு இசைக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகர் தனது உரையில் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர்,

இந்தியா வளர்ந்து வரும் பொருளாதாரத்தையும் பல்வகைமையுடைய ஜனநாயகத்தையும் கொண்டுள்ள நாடாகும். இந்த நிலைமை இலங்கைக்கும் பொதுவானதாகும். மேலும் இலங்கை இன்னும் சில நாட்களில் தனது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே மிகவும் நெருங்கிய நண்பர்கள் என்ற அடிப்படையில் நாம் இந்நிகழ்வை ஒற்றுமையின் உண்மையான ரிதமாக கொண்டாட வேண்டும். இது வெவ்வேறு இசைக் குழுக்களின் இசைச் சங்கமம் மட்டுமல்ல, இது இலங்கை மற்றும் இந்தியாவின் ஒற்றுமையையும் குறிக்கும்.

75 ஆவது சுதந்திர தினத்துடன் நாமும் எமது ஒற்றுமை மற்றும் 75 வருட இராஜதந்திர உறவைக் கொண்டாடுவதுடன் எமது நூற்றாண்டு சுதந்திர விழாவை நோக்கிய எமது பயணத்துக்காக எம்மை மீண்டும் அர்ப்பணிப்போம் என்றும் தெரிவித்தார்.

அரசியல் தலைவர்கள், தொழில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், இராஜதந்திரிகள், அதிகாரிகள் மற்றும் அரசு ஊழியர்கள் மட்டுமன்றி சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் இப்பயணத்தில் பங்கு வகிக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை, இந்தியப் பிரஜைகள் உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

### பௌசி மீண்டும்...

**நா. தினுஷா**

அப்துல் ஹமீட் மொஹமட் பௌசி மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த முஜிபுர் ரஹ்மான் தனது பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, பாராளுமன்றத்தில் ஏற்பட்ட உறுப்பினருக்கான வெற்றிடத்துக்கு பௌசி தெரிவு செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

இந்த நியமனம் தொடர்பான வர்த்தமானி, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட ஐந்து உறுப்பினர்களின் கையொப்பத்துடன் நேற்று முன்தினம் (24) வெளியிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட மொஹமட் முஜிபுர் ரஹ்மான் அவரது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, இந்த வெற்றிடம் குறித்து பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது. அதன் பிரகாரமே பௌசி மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### கருவுக்கு உயரிய விருது...

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம் இந்த விருது வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க, வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

### சுதந்திர தினம்...

எழுபத்தைந்து வருட கஷ்டங்களையே சுதந்திர தினமாக கொண்டாட வேண்டிய நிலைமையே தற்போது இருக்கிறது. ஆகவே, சுதந்திரத் தினத்தன்று நாட்டு மக்கள் தமது இல்லங்களிலும் வீதிகளிலும் கறுப்புக்கொடி பறக்கவிட்டு கறுப்பு சுதந்திர தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நேற்று (25) வேண்டுகோள் முன்வைத்தார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 75ஆவது ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. யாருக்கான இந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னெடுக்கிறார்கள் என்பது புரியவில்லை. நாட்டிலுள்ள பொது மக்களுக்கு இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. ஒரு ரூபா கூட வெளிநாடுகளிடம் கடன் பெறாமலிருந்த நாட்டை, பில்லியன் கணக்கான ரூபா கடனுடனேயே 75ஆவது ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். எம்மை கடனாளர்களாக மாற்றி, எமது எதிர்காலத்தை இல்லாமல் செய்திருக்கும்போது எவ்வாறு சுதந்திரத் தினத்தை கொண்டாடுவது. இதனை சுதந்திரமாக ஏற்றுக்கொள்ள முடியாது. பிரித்தானிய பிடியிலிருந்து சுதந்திரத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர், அரசியல்வாதிகள் எம்மை பணயக் கைதிகளாக வைத்திருக் கிறார்கள்.

அடுத்த மாதம் 4ஆம் திகதி சுதந்திர தினமல்ல, அன்று எமது சுதந்திரம் இல்லாமல் போன நாளாகும். 75 வருடம் அனுபவித்த கஷ்டங்களையே அனுஷ்டிக்க வேண்டியுள்ளது. ஆகவே, சுதந்திரத் தினத்தன்று நாடு பூராகவும் இருக்கும் ஒவ்வொரு வீடுகளிலும் வீதிகளிலும் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகின்றன. ஆனால் இதுவரையில் எதுவும் நாட்டில் முன்னெடுக்கவில்லை. இது கறுப்பு சுதந்திர தினமாகும். இம்முறை மட்டக்களப்பு பிரதேசத்தில் இந்த சுதந்திரத் தினத்தை கறுப்பு சுதந்திர தினமாக அனுஷ்டிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறேன். யார் என்ன கூறினாலும் இம்முறை கறுப்பு சுதந்திரத் தினத்தை அனுஷ்டிப்பேன். இது அரசியல்வாதிகளுக்கானதல்ல. பொதுமக்களுக்கானது என்றார்.

### மின்சார சபை நட்டத்துக்கு...

எனவே, முட்டாள்தனமான தீர்மானங்கள் எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் சிந்தனை ஆற்றல் குறைந்துவிடும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் தொடர்ச்சியான மின் விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் விசாரணை செய்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று (25) அழைப்பு விடுத்திருந்தது.

நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் கலந்துகொள்ளவில்லை என்பதுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் சில தினங்களுக்கு உயர்தரப் பரீட்சை எழுதும் மூன்றரை இலட்சம் மாணவர்களும் அவர்களின் பரீட்சை செயற்பாடுகளை எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுப்பது என்பது தொடர்பிலும் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக எவ்வாறு தொடர்ச்சியான மின்விநியோகத்தை வழங்குவது என்பது குறித்துமே கலந்துரையாடியிருந்தோம். மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் சமுகமளிக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் இவ்வாறு மின்துண்டிப்பை மேற்கொள்வது, உண்மையில் இது மனித உரிமையை மீறும் வகையிலான செயற்பாடாகும். அதேபோன்று எதிர்வரும் 22 நாட்களுக்கு அவர்களுக்கு தேவையான மின் விநியோகத்தை முறையாக வழங்க வேண்டியது அவசியமாகும். இதற்கான நிதி உதவி அல்லது வளங்களை விநியோகிக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்குமே வழங்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் அறிவிப்புகள் அதிருப்திக்குரியதாகவே இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இல்லை, முடியாது என்ற பதிலையே வழங்குகிறார்கள். மின் கட்டணத்தை அதிகரித்தால் மாத்திரமே மின்சபையின் இருப்பு அதிகரிக்கும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. மின் கட்டண அதிகரிப்புக்கு இதுவரையில் நாங்கள் அனுமதி வழங்கவில்லை. அவ்வாறு அனுமதி வழங்கவும் முடியாது. சட்டரீதியாக, சரியான முறையினூடாகவே அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானம் சட்ட ரீதியானதா, இல்லையா? என்பது தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் ஏனைய சட்ட ஆலோசகர்களின் ஆலோசனையை பெற்றுக் கொள்ள தீர்மானித்திருக்கிறோம்.

உயர்தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மின் விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகிறோம். அதற்கிடையில், இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு அவசியமென்று மின்சார சபை அறிவித்திருந்தது. எனவே, நிதியை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு மின்சார சபைக்கே இருக்கிறது.

உயர்தர மாணவர்களுக்கான முறையான மின் விநியோகத்தை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. இவை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பொறுப்பல்ல. அதனை எங்களின் மீது சாட்டவும் முடியாது.

இது எங்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கும் சந்தர்ப்பம் இல்லை. இது முதுகை நிமிர்த்தி செயற்படவேண்டிய சந்தர்ப்பமாகும். மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர மின் விநியோகம் தொடர்பில் முட்டாள் தனமான தீர்மானங்களை எடுக்கிறார். முட்டாள்தனமான தீர்மானங்கள் எடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் சிந்தனை செய்யும் சக்தி குறைவடைந்துவிடும்.

அரசியல்வாதிகளின் தவறான தீர்மானங்களினாலேயே நாடு இந்த நிலைமையை சந்தித்திருக்கிறது. 2014ஆம் ஆண்டு முட்டாள்தனமான அரசியல் தீர்மானமொன்றை எடுத்து, மின் கட்டணத்தை 25 சதவீதத்தால் குறைத்தார்கள். அதன் பின்னர், வருடாந்தம் 50 பில்லியன் ரூபா நட்டத்தை சந்திக்க நேர்ந்தது. இந்த நட்டத்தை ஏழு வருடங்களுக்கு பார்த்தல், மின்சார சபைக்கு 350 பில்லியன் ரூபா இலாபம் கிடைக்க வேண்டும். ஆகவே, அரசியல்வாதிகளின் தனி தீர்மானங்களினாலேயே மின்சார சபை இவ்வளவு நட்டத்தை சந்தித்திருக்கிறது.

பொதுவாக, 2007ஆம் ஆண்டு குறைந்தளவு மின்சாரத்தை பயன்படுத்தும் குறைந்த வருமானம் பெறும் நுகர்வோருக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. அதுவே எங்களின் நோக்கமுமாகும். எனவே, குறைந்த வருமானம் பெறுபவர்கள் பயங்கொள்ள வேண்டியதில்லை. மின் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என்றார்.

### மின்சாரக் கட்டணத்தை...

ஆணைக்குழு ஏகமனதாகத் தீர்மானம் எடுத்திருப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தேசிய பேரவையில் தெரிவித்தனர். இதற்கான ஆவணங்கள் நேற்றைய தினம் (25) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் (24) பாராளுமன்றத்தில் நடைபெற்ற தேசிய பேரவைக் கூட்டத்திலேயே மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் யோசனை குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

2014ஆம் ஆண்டும் இதேபோன்று மின்சாரக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இங்கு கருத்துத் தெரிவித்தார். தேவைப்பட்டால் இது தொடர்பான ஆவணங்களை ஆணைக்குழுவுக்கு வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார். அத்துடன், இவ்விடயம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை மின்சார சபையின் செயற்பாட்டுச் செலவுகளை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக மின்சார சபையின் அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர்.

தேசிய பேரவைக் கூட்டத்தில் அமைச்சர்களான டிரான் அலஸ், கஞ்சன விஜேசேகர, நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர்களான டி.வி சானக, இந்திக அனுருத்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீரவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் தேசிய பேரவைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

### பெருந்தொகை பணத்துடன்...

வீதியின் குறுக்காக நிறுத்திவிட்டு, நிதி வைப்பிலிடும் இயந்திரம் இருக்கும் இடத்துக்கு வந்த முகங்களை மூடிய நால்வர் அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரியின் தலை மீது துப்பாக்கி வைத்து அச்சுறுத்தல் விடுத்து அவரை கதிரையில் வைத்து கட்டியுள்ளமை சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் நிலத்தில் பொறுத்தப்பட்டிருந்த பணம் வைப்பிலிடும் இயந்திரத்தை அங்கிருந்து உடைத்து எடுத்து, அதனை தூக்கி வேனில் வைத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச்சென்றதாக குறித்த பாதுகாப்பு அதிகாரி பொலிஸாரிடம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரி, அவரை கட்ட பயன்படுத்தப்பட்டிருந்த கேபிள் நாடாக்களை நீக்கிக்கொண்டு வங்கியில் அவசர பிரிவை இயக்கியுள்ளதுடன் குறித்த வேனின் இலக்கத்தையும் பதிவுசெய்துகொண்டுள்ளார்.

அவசர ஒலியைக் கேட்ட வங்கிக்கு அருகிலுள்ள கம்பளை பொலிஸ் தலைமையக பொலிஸ் அதிகாரிகள், சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், தப்பிச் சென்ற கொள்ளையர்கள் குறித்த வேனை பேராதெனிய பிரதேசத்தில் நிறுத்திவிட்டு, சாரதியை வேனிலேயே விட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

குறித்த வேனின் சாரதி பொலிஸ் அவசர பிரிவுக்கு வழங்கிய தகவலின் பிரகாரம் அந்த வேனை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கொள்ளையர்கள் இந்த வேனை வாடகைக்கு பெற்றுக்கொண்டதாகவும் வேனிலேயே தன்னை கட்டிவிட்டு கொள்ளையர்கள் இன்னுமொரு வேனில் தப்பிச் சென்றதாகவும் வேனின் சாரதி பொலிஸாரிடம் தெரிவித்திருக்கிறார். மேலும், சாரதியிடம் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். இயந்திரம் திருடப்பட்ட சந்தர்ப்பத்தில் அதில் எவ்வளவு பணம் இருந்தது என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் பெருந்தொகை பணம் இருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

கம்பளை நகரம், கண்டி வீதியில் அமைந்துள்ள குறித்த தனியார் வங்கியுடன் மேலும் இரு தனியார் வங்கிகள் இருப்பதுடன், அந்த வங்கிகளின் பாதுகாவலர்களும் இந்தச் சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த வங்கிகளில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகளை கம்பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### வரி வசூலிப்பு சட்டத்தை...

2023ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள புதிய வருமான வரி வசூலிப்பு சட்டத்துக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே டொக்டர் வாசன் ரட்ணசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச மருத்துவ சங்கம் என்ற ரீதியில் பல்வேறு தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து, அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டுள்ள வரி வசூலிப்பு சட்டத்துக்கு எதிராக பல்வேறுபட்ட போராட்டங்களை முன்னெடுத்து எங்களுடைய எதிர்ப்புகளை தெரிவித்து வருகிறோம்.

அரச ஊழியர்களின் வேதனத்தில் வரியாக, பாரிய தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை கவனத்திற்கொண்டு அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் ஏனைய தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கங்களுடன் இணைந்து அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியிலுள்ள சுகாதார நிலையங்கள், தொழில் நிலையங்களிலே கறுப்பு வாரத்தை அனுஷ்டித்து வருகிறது.

எதிர்காலத்தில் கொண்டுவரப்படவுள்ள வரி வசூலிப்பு சட்டத்துக்கு எதிராக அரச மருத்துவ சங்கம் பாரிய போராட்டங்களை முன்னெடுக்கும். நிச்சயமாக தொடர்ச்சியான போராட்டங்களுக்கு தயாராவோம்.

ஆகவே, அசாதாரணமாக திணிக்கப்பட்ட இந்த வரி வசூலிப்பு சட்டத்தை அரசு மீளப்பெற்று சாதாரணமாக வரிவசூலிப்புச் சட்டத்தை கொண்டுவரவேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும்.

பொதுமக்கள் இந்த விடயம் குறித்து மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

வைத்தியர்கள் உட்பட தொழில்வல்லுநர்கள் வரி விதிப்புக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால், மறுபுறம் விதிக்கப்படுகின்ற வரி சாதாரணமானதாக, ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் நீதியானதாகவும் இருக்கவேண்டும்.

ஆனால், அரசோ அநீதியாக செயற்பட்டு மக்களுக்கு பாதகமான வரிவசூலிப்புத் திட்டத்தை அமுல்படுத்தி தொழில்வல்லுநர்களை, வைத்தியர்களை நாட்டிலிருந்து வெளியேற்றும் திட்டத்தை அமுல்படுத்துகிறது. இதனை யாருடைய நோக்கத்துக்காக அரசாங்கம் செய்கின்றது என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

ஆகவே, அரசாங்கம் உண்மையாக நாட்டை முன்னேற்ற வேண்டுமாக இருந்தால், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமாக இருந்தால் தொழில்வல்லுநர்களை, வைத்தியர்களை நாட்டில் தக்கவைத்து ஏற்பட்டுள்ள சுகாதார நெருக்கடிக்கு தீர்வை பெற்றுகொடுக்கும்போதுதான் நாடு முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும்.

நாங்கள் 30இற்கும் மேற்பட்ட தொழில்வல்லுநர்களுடைய சங்கங்களுடன் ஒன்றிணைந்து தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பை தோற்றுவித்துள்ளோம். இதனூடாக வரிவசூலிப்புக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

மத்திய வங்கியின் அதிகாரிகள், தேசிய வருமானவரித் திணைக்களத்தின் அதிகாரிகள் என அனைவராலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட இந்த வருமான வரி வசூலிப்பு சட்டத்தை யாருடைய நோக்கத்துக்காக, யாருடைய ஆலோசனைக்கு அமைய அரசு கொண்டுவந்துள்ளது என்பதை அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் மிக துல்லியமாக அறிந்துள்ளது.

ஆகவே, இவ்வாறு புதிய வரி வசூலிப்பு சட்டத்தை கொண்டுவருவதற்கு காரணமாக இருப்பவர், அதற்கு ஆலோசனை வழங்கியவர் என்ற ரீதியில் ஒருவர் குறித்த தரவுகள் எங்களுக்கு கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

இவர் நிதியமைச்சிலே இருக்கின்ற வரி சம்பந்தமான, கொள்கை சம்பந்தமான ஆலோசகராக செயற்பட்டு வரும், தனுஜா பெரேரா என்பவரே இந்த வரி வசூலிப்பு சட்டத்துக்கு இந்த கொள்கைக்கு பின்னால் இருப்பவர் என்பதை அறியமுடிகிறது.

அவரிடம் நாம் இந்தக் கேள்விகளை முன்வைக்கின்றோம், தங்களுடைய தனிநபர் முடிவினால் இந்த வரி வசூலிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதா? இந்த வரி வசூலிப்புச் சட்டத்தால் ஏற்படுகின்ற பாதகமான நாட்டுக்கு ஏற்படுகின்ற தீமைகளுக்கு நீங்கள் பொறுப்பேற்க தயாரா என அரச மருத்துவச் சங்கம் கேட்கிறது.

எது எவ்வாறாக இருப்பினும், அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கப் போராட்டம் முடிவு நிறைவுபெறப் போவதில்லை. இந்த வரி வசூலிப்பு சட்டம் மீளத் திருத்தி ஒரு சாதாரண வரி வசூலிப்புச் சட்டம் கொண்டுவரும் வரை தொடர்ச்சியான போராட்டம் முன்னெடுக்கப்படும்.

## யாழ். மாநகர முதல்வருக்கெதிரான வழக்கு பெப்ரவரி 6இல் விசாரணைக்கு

யாழ். மாநகர முதல்வரின் தெரிவு சட்டவிரோதமாக இடம்பெற்றதாக தெரிவித்து மாநகர சபை உறுப்பினர் வரதராஜா பார்த்திபனால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வழக்கு எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதால் எதிராளிகளை எதிர்வரும் 6ஆம் திகதி மன்றில் ஆஜராக அழைப்பாணை அனுப்புமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

## வசந்த முதலிகேவின் விளக்கமறியல் நீடிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே எதிர்வரும் 8ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று (25) கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்தும் நோக்கில் மின்கலத்தில் இயங்கும் படகு இயந்திரங்கள் அறிமுகம்

### சந்தைப்படுத்தல் அனுமதி மற்றும் விலை குறித்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு





கடற்றொழிலாளர்களின் எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்தும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கமைய உருவாக்கப்பட்டுள்ள மின்கலத்தில் இயங்கும் படகு இயந்திரங்களை கடற்றொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது.

'மில்டன் மோட்டர்ஸ்' எனும் பெயரில் தனியார் தொழில்முயற்சியாளர் ஒருவரால் வடிவமைக்கப்பட்டுள்ள, குறித்த மின்கல படகு இயந்திரங்களின் சோதனைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில், அதனை சந்தைப்படுத்துவதற்கான அனுமதி மற்றும் விலை நிர்ணயங்கள் தொடர்பாக குறித்த தொழில் முயற்சியாளருடன் கடற்றொழில் அமைச்சர் கலந்துரையாடினார்.

இதன்போது, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹாவத்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கு எதிராக யாழ். மீனவர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்த பின்னர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றை கையளித்தவேளை, குறித்த படகு தொடர்பில் கருத்து தெரிவித்ததுடன், அந்தப் படகானது பலமடங்கு செலவுகளைக் குறைக்கும் என அமைச்சர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் தை மாதம் 11ஆம் நாள் புதன்கிழமை**

மேஷம் – தேவையற்ற செலவுகளை குறைத்துக்கொள்வது நல்லது, வாகனங்களில் பயணிக்கும் போது எச்சரிக்கை வேண்டும்.

ரிஷபம் – பொருள் வரவும் அதனால் மன மகிழ்ச்சியும் உண்டு, வெளிநாட்டு நண்பர்களால் உதவிகள் உண்டு

மிதுனம் – எதிர்பார்த்துக் காத்திருந்த உதவி எதிர்பாராத வகையில் கிடைக்கும், தொழில் வியாபார இலாபங்கள் உண்டு.

கடகம் – உங்கள் நிலையை தக்க வைத்துக்கொள்ள முழுமையான உழைப்பு அவசியம், எதிரிகளின் கை ஓங்கும்.

சிம்மம் – உடல், மன நோய்களால் அவதிப்படுவீர்கள், புதிய முயற்சிகள் வேண்டாம்.

கன்னி – காதல் அல்லது திருமணம் நிச்சயிக்கப்படும், கூட்டு வியாபார நன்மைகள், இலாபங்கள் உண்டு.

துலாம் – தேவைக்கேற்ப பண வருவாய் அமையும், கேட்ட கடன் கிடைக்கப் பெறுவீர்கள்.

விருச்சகம் – உடல் அசதி, நோயால் சற்று மந்த நிலையை அனுபவிப்பீர்கள், குடும்ப சுகம் உண்டு.

தனுசு – தாயாரின் உடல்நிலை தொடர்பாக கவனம் செலுத்துங்கள், வாழ்க்கை முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்வீர்கள்.

மகரம் – எதையும் தைரியமாகத் துணிந்து செய்வீர்கள், நினைத்த பணத்தொகை உங்கள் கரங்களுக்கு கிட்டும்.

கும்பம் – முக்கியமானவர்களுடன் உரையாடும்போது வார்த்தைகளை கவனமாக பிரயோகியுங்கள், தனச் சேதம் உண்டு.

மீனம் – எதிர்பாராத வகையில் பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள், வீண் மனக் குழப்பம் வேண்டாம்.

**திதி** : பஞ்சமி மு.ப. 10.28 வரை பின் ஷஷ்டி
**நட்சத்திரம்** : உத்தரட்டாதி மாலை 6.56 வரை பின் ரேவதி
**யோகம்** : சித்த யோகம் (சுப காரிய நன்மை)
**வார சூலை**: தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்** : மு.ப.11.33 - 12.33 மணி வரை
**ராகு காலம்** : 2.03 - 3.33 மணி வரை
**எமகண்டம்** : 6.33 - 8.03 மணி வரை
**குளிகை** : 9.33 - 11.03 மணி வரை
**சந்திராஷ்டமம்** : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**விசேட தினம்** : ஷஷ்டி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# பாலாவி நகரிலுள்ள உணவகத்தில் எரிவாயு கசிவு – ஒருவர் தீக்காயம்

(ரஸீன் ரஸ்மின்)




புத்தளம், பாலாவி நகரிலுள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட எரிவாயு கசிவினால் அந்த உணவகத்தின் உரிமையாளர் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (25) காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தோசை, உளுந்துவடை விற்பனை செய்யும் குறித்த உணவகத்தின் உரிமையாளர் வழமைபோன்று தனது தோசைக் கடை உணவகத்தில் காலைநேர உணவுகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது, குறித்த தோசையை தயாரிப்பதற்காக தயாராகியபோது, கடையிலிருந்த எரிவாயு முடிந்தமையினால் மற்றொரு சமையல் எரிவாயு சிலிண்டரை கொள்வனவுசெய்து மீதி வேலையை செய்வதற்காக ஆயத்தமானபோது புதிதாக கொள்வனவுசெய்யப்பட்ட எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் தீ பற்றியதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் கடும் பிரயத்தனத்திற்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக அந்தக் கடையின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதன்போது உணவகத்தின் உரிமையாளர் சிறிய எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளதுடன், கடையின் முன்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடியும் வெடித்துச் சிதறியுள்ளதுடன், கடையின் முன்பகுதியும் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு எரிவாயு சிலிண்டர் திடீரென கசிந்து பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை குறித்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னரும் புத்தளம் மாவட்டத்தில் பல உணவகங்களிலும், வீடுகளிலும் இவ்வாறு சமையல் எரிவாயு கசிவு ஏற்பட்டு பாதிப்பை ஏற்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு இலங்கையர்களுக்கு வீடு விற்றதன் மூலம் 5 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வருமானம்

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அறிவிப்பு

வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களுக்கான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நடுத்தர வர்க்க வீடு விற்பனைத் திட்டத்தின் மூலம், இதுவரை 5 இலட்சத்து இரண்டாயிரத்து 170 அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது இலங்கை நாணய பெறுமதியில் 181 மில்லியன் ரூபாவாகும்.

இவ்வருடம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான நடுத்தர வர்க்க வீடுகளை வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் 2 மில்லியன் டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள கொழும்பு ஹார்பர் பீச் ரெசிடென்ஸ் வீடமைப்புத் திட்டத்தையும் இந்த அதிகாரசபை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

400 வீடுகள் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டத்தில் ஒரு வீட்டை வாங்க, 40,000 டொலர்கள் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெற்பயிர்களில் ஏற்படும் மஞ்சள் நிற மாற்றத்துக்கு 8 காரணங்கள் கண்டுபிடிப்பு

### விவசாயத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பிப்பு

நெற்செய்கையில் ஏற்படுகின்ற மஞ்சள் நிறத்திற்கான எட்டு காரணங்களை விவசாயத் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

இலங்கையில் பெரும்போக நெற்செய்கை தொடர்பில் சில பிரதேசங்களில் பதிவாகியுள்ள பயிர் மஞ்சள் நிறமாக மாறியமை தொடர்பிலான விசாரணை அறிக்கையை விவசாயத் திணைக்களம் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளித்துள்ளது.

பொஸ்பரசு குறைபாடு (P), பொட்டாசியம் குறைபாடு (K), பொட்டாசியம் மற்றும் பாஸ்பரஸ் (P மற்றும் K) இரண்டும் குறைபாடு, நூற்புழுக்களால் வேர் அமைப்புகளுக்கு சேதம், பழுப்பு அந்துப்பூச்சி தொற்று, நெல்லில் உவர்த்தன்மை, மண்ணில் அதிகளவான இரும்பு மற்றும் நெற்பயிர்களைத் தாக்கும் நுண்ணங்கி ஆகியனவே பயிர் மஞ்சள் நிறத்திற்கு காரணமாக இருக்கவேண்டும்.

எவ்வாறாயினும், பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறுவதைத் தடுக்க விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும் என்றும், தேவைப்பட்டால், விவசாயத் திணைக்களம் பூச்சிக் கட்டுப்பாட்டுக்கு நிதியை ஒதுக்கி தேவையான பூச்சிக்கொல்லிகளை கொள்வனவு செய்யவேண்டும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர அறிவுறுத்தினார்.

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி தின முன்னேற்பாடு

### அரச அதிபர் தலைமையில் ஆராய்வு



(மன்னார் நகர் நிருபர்)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி சிவராத்திரி தினத்தை சிறப்பாக முன்னெடுக்கும் வகையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரேன்லி டி மெல் தலைமையில் நேற்று (25) காலை விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை செயலாளர் சிவசம்பு இராமகிருஷ்ணன் மற்றும் அதன் பிரதிநிதிகள், அரச தனியார் திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ், இராணுவம் உயர் அதிகாரிகள் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் உட்பட அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் குறித்த கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சிவராத்திரி தினம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் யாத்திரிகர்கள் வருகை குறைக்கப்பட்டு, பல சுகாதார கட்டுப்பாட்டுக்கு மத்தியில் இடம்பெற்றது.

இம்முறை சிவராத்திரி தினம் பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் ஒன்றுகூடலில் இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்தில் சிவராத்திரி தினத்தில் பல இலட்சம் யாத்திரிகர்கள் வருகை தரவுள்ள நிலையில், ஏற்பாடுகள் முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் முன்னாயத்தங்களும் குறிப்பாக, சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, குடிநீர் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

# ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை லங்கா சதொச குறைப்பு

லங்கா சதொச 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்க தீர்மானித்துள்ளது.

அதன்படி, இன்றுமுதல் (26) அமுலுக்கு வரும் வகையில் காய்ந்தமிளகாய், அரிசி, பருப்பு உள்ளிட்ட 6 பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஒரு கிலோ காய்ந்தமிளகாய் 30 ரூபா குறைக்கப்பட்டு 1,700 ரூபாவுக்கும், ஒரு கிலோ வெள்ளை பச்சையரிசி 10 ரூபா குறைக்கப்பட்டு 169 ரூபாவுக்கும், சிவப்பரிசி ஒரு கிலோ 8 ரூபா குறைக்கப்பட்டு 179 ரூபாவுக்கும், வெள்ளை நாடு ஒரு கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 184 ரூபாவுக்கும், சிவப்பு பருப்பு ஒரு கிலோ 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 365 ரூபாவுக்கும், கீரி சம்பா 4 ரூபா குறைக்கப்பட்டு 235 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், குறைக்கப்பட்ட விலைகளில் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலிருந்தும், பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென சதொச அறிவித்துள்ளது.

# 16 மில்லியன் ரூபா பெறுமதியான 49 கிலோ கேரள கஞ்சா யாழில் மீட்பு



49 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் மூவர் யாழ். கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். டெல்ப்ட் தீவில் சந்தேகத்திற்கிடமான டிங்கி படகொன்றை கடற்படையினர் சோதனை செய்ததில் 09 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 20 கிலோ 900 கிராம் கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, கடத்தலில் ஈடுபட்ட 03 சந்தேக நபர்கள் மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிங்கி படகும் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.





மேலும், கடற்படையினர் அதே கடல் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டபோது, அங்கு கடற்படையினர் மற்றொரு சாக்குப்பையை நீரில் மூழ்கிய நிலையில் மீட்டனர். இதன்போது சாக்கு மூடையிலிருந்து சுமார் 29 கிலோகிராம் எடையுள்ள 11 கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன.

இந்த நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த பெறுமதி ரூ. 16 மில்லியன் ரூபாவாகுமென தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25 முதல் 42 வயதுக்குட்பட்ட யாழ்ப்பாணம் மண்டைதீவு மற்றும் தாளையடி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், சந்தேகநபர்கள், கேரள கஞ்சா மற்றும் டிங்கி படகு ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.







இங்கிரிய, றைகம், மேற்பிரிவு அருள்மிகு நொண்டி அழகர் ஆலயத்தின் வருடாபிஷேக பெருவிழா நேற்று முன்தினம் (24) சர்வாலய கிரியாமணி, கிரியாகுகசாகரம், கிரியாவித்தகர் சிவஸ்ரீ கணேச பரமசிவன் குருக்களின் தலைமையில் நடைபெற்றது. (மணி ஸ்ரீகாந்தன்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2023, ஜனவரி 26ஆம் திகதி, வியாழக்கிழமை**

# ஊடகர்களும் கறுப்பு ஜனவரியும்!

பல்வேறு ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட பல ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி இலங்கையில் வருடம் தோறும் ஜனவரி மாதத்தை கறுப்பு ஜனவரியாக ஊடகர்கள் மற்றும் ஊடக அமைப்புகள் கடைப்பிடித்து வருகின்றன.

அந்தவகையில், இவ்வருடமும் இலங்கையில் பல்வேறு பகுதிகளில் ஊடகவியலாளர்கள் கறுப்பு ஜனவரியை அனுஷ்டிக்கின்றனர்.

2006ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனுடைய 17ஆம் ஆண்டு நினைவு நாளை நினைவு கூரும் முகமாகவும் 2010ஆம் ஆண்டு கடத்தப்பட்ட ஊடகவிலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் நினைவாகவும் பல்வேறு இடங்களில் கறுப்பு ஜனவரியை அனுஷ்டித்து துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஊடகவியலாளர் சுப்ரமணியம் சுகிர்தராஜன் எம்மோடு இருந்திருந்தால் அவருக்கு இன்று 53 வயதாகியிருக்கும். ஆனால், வேதனையளிக்கும் விதத்தில் 17 ஆண்டுகளுக்கு முன்னர் அவரது 36ஆவது அகவையில் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

கிழக்குக் கடற்கரை நகரான திருகோணமலையில், 2006ஆம் ஆண்டில் இரண்டாவது நாள், ஐந்து மாணவர்கள் எப்படி படுகொலை செய்யப்பட்டனர் என்பதை மறுக்க முடியாத புகைப்பட ஆதாரத்துடன் அவர் நிரூபித்ததால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஆனால், அந்த மாணவர்கள் எடுத்துச் சென்ற குண்டு வெடித்ததாலேயே அவர்கள் உயிரிழந்தனர் என்று இலங்கை அரசு கூச்சமின்றி பச்சைப் பொய் கூறியது.

சுகிர்தராஜனுக்கு முன்னரும் பிறகும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அல்லது கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கைகளைக் கூட்டினால் அது 50ஐ எட்டும். அதில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். அதிலும் அதிகளவானவர்கள் ஜனவரி மாதம் பலியாயினர்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அதாவது ஜனவரி 24ஆம் திகதி காணாமல் போயிருந்தார்.

பிரகீத் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் குறித்து ஒன்பது இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் 17 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்தார். விசாரணைகள் நடந்தன. ஆனால், பிரகீத்துக்கு என்ன நடந்தது என்பது மட்டும் இறுதிவரை புரியாத புதிராகவே உள்ளது.

இதன் காரணமாக ஜனவரி மாதமே ஊடகவியலாளர்களுக்கு கறுப்பு மாதமாக உள்ளது. குற்றமிழைத்தவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படாதது மட்டுமின்றி, அவர்கள் சலுகைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். மேலும், உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்ட தொடர்ச்சியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை ஊடகவியலாளர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால் அவர்கள் சில தகுதிகளை கொண்டிருக்க வேண்டும். அரசியல்வாதிகளின் ஊதுகுழல்களாக, இலஞ்சம், ஊழல் போன்றவற்றை வெளிக்கொணராத, இனச் சமூகங்கள் மீதான அக்கிரமங்களைக் கண்டும் காணாமல் இருப்பது, ஜனநாயகத்தின் மீதான அழுத்தங்களை கண்டு வாளாவிருப்பது போன்ற தகுதிகளை கொண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படியல்லாமல் நேர்மைக்கும் சத்தியத்துக்கும் கட்டுப்பட்டு உண்மைகளை வெளிக்கொணரும் ஒரு சில ஊடகர்கள் இன்னமும் செயற்பட்டு சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது. அதனால்தான் அவர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன என்பதை விரிவாக விளக்கிக்கூறத் தேவையில்லை.

இலங்கை வரலாற்றில் முதலாவது ஊடகவியலாளர் படுகொலை 1981ஆம் ஆண்டு பதிவானது. 1981 முதல் 1991 வரை 62 ஊடகவியலாளர்களும் 1994 முதல் 2005 வரை 37 ஊடகவியலாளர்களும் 2005 முதல் 2010 வரை 44 ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும் கெடுபிடிகளும் படுகொலைகளும் அதிகரித்தபோது அதற்கு எதிராகவும் அதனை வெளிச்சத்திற்கு கொண்டுவந்த பல தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள்ளும் படையினர் அதிகமாக பிரசன்னமான பகுதிகளிலும் வைத்து பல தமிழ் ஊடகவியலாளர்கள் வடகிழக்கில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதுவரையில் ஒரு ஊடகவியலாளரின் விசாரணையையும் உரியமுறையில் மேற்கொள்ளாது காலத்திற்கு காலம் வரும் அரசுகள் அவற்றைக் கிடப்பில் போட்டுவருவதுடன், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தொடர் அச்சுறுத்தலையும் மேற்கொண்டுவருகின்றன.

இதுவரையில் இலங்கையில் கொல்லப்பட்ட எந்த தமிழ் ஊடவியலாளர்களின் கொலை குறித்தும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இன்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்படமுடியாத நிலையே இருந்துவருகின்றது.

இலங்கையில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து சர்வதேச சமூகம் எந்தவித அழுத்தங்களையும் வழங்கியதாக இதுவரையில் தெரியவில்லை. இந்த நிலைமை இனியும் தொடராது என்பதற்கான எந்த உத்தரவாதங்களும் இல்லை. கொல்லப்பட்ட, கடத்தி காணாமலாக்கப்பட்ட தமிழ், சிங்கள ஊடகர்கள் தொடர்பில் நினைவேந்தல்களை நடத்துவதைவிட ஊடகர்களால் ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால், கொல்லப்பட்டவர்களுக்கு நீதி வழங்கத் தவறும் ஆட்சியாளர்கள் அந்தப் பாவங்களுக்காக இயற்கையால் தண்டிக்கப்படுவார்கள். கடந்தகால வரலாறு அதனையே சுட்டி நிற்கின்றது.

''லசந்த யார்?'' என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய முன்னர் ஒரு தடவை ஊடகமொன்றிடம் கேள்வியெழுப்பியமையும் இப்போது ''கோட்டாபய யார்? எங்கே இருக்கிறார்?'' என்று கேட்கும் நிலை எழுந்துள்ளமையும் அப்படியான கர்ம வினைகளின் சான்றே. இயற்கையின் தண்டனையே!

# இனப்பிளவை இல்லாமல் செய்ய ஜனாதிபதிக்குள்ள கால எல்லை!



கலாநிதி ஜெகான் பெரேரா



பெருமளவு தாமதத்துக்கு பிறகு இறுதியில் தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தல்கள் மார்ச் 9ஆம் திகதி நடத்தப்படும் என்று தீர்மானித்திருக்கிறது. இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டதன் பிரகாரம் ஏற்கெனவே ஒரு வருடத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. ஒரு வருடத்துக்கும் அப்பால் தேர்தல்களை ஒத்திவைத்தால் அது சட்டவிரோதமான ஆட்சிமுறைச் சிக்கலுக்குள் நாட்டைத் தள்ளிவிடும் என்பதுடன், அதன் விளைவாக சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்து ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கும்.

நாடு இப்போது தேர்தல் திசை நோக்கி நகர்த்தப்படுகிறது. இது ஒன்றும் அரசாங்கத்தின் விருப்பம் அல்ல. தங்களது வெற்றிவாய்ப்புகள் குறித்து நம்பிக்கையுடன் இருக்கும் எதிர்க்கட்சிகளினதும் அவற்றின் வேட்பாளர்களினதும் தேர்தல்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில் அக்கறைகொண்ட சிவில் சமூக தேர்தல் கண்காணிப்பு குழுக்களினதும் விருப்பமாகும். மக்களினால் தெரிவுசெய்யப்படும் பதவிகளைக் கைப்பற்றுவதற்கு அரசியல்வாதிகள் வாய்ப்புகளை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்துக்காக பாடுபடுகின்ற சிவில் சமூக அமைப்புகளை பொறுத்தவரை, அவை முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு மத்தியிலும், ஜனநாயக பொறிமுறைகள் தொடர்ந்து செயற்படுவதை உறுதிசெய்யவதில் நாட்டம் கொண்டிருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல்களை மார்ச் 9ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்திருக்கின்ற போதிலும், உண்மையில் அந்த நேரத்தில் அவை நடைபெறுமா என்ற சந்தேகம் தொடர்கிறது.தேர்தல்களை நடத்துவதற்கு திறைசேரியில் பணமில்லை என்று அரசாங்கப் பேச்சாளர்கள் கூறுகிறார்கள். இதை அரசாங்கம் உயர் நீதிமன்றத்திலும் கூறியிருக்கிறது.

பொருளாதாரம் மீட்சிபெறும் வரை நாட்டுக்கு அரசியல் உறுதிப்பாடு தேவைப்படுகிறது என்று ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தின் வேறு பேச்சாளர்கள் வாதிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு புதுமையான வாதமும் முன்வைக்கப்படுகிறது. அதாவது தேர்தல் திகதி குறித்த தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழு எடுத்த போது அதன் ஐந்து உறுப்பினர்களில் இருவர் மாத்திரமே பிரசன்னமாகியிருந்ததால் அந்த தீர்மானம் கேள்விக்குரியதாம். ஏனைய மூன்று உறுப்பினர்களும் மெய்நிகர் காட்சி வழியாக கூட்டத்தில் பங்கேற்றதாக ஆணைக்குழு பதிலளிக்கவேண்டியேற்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு முயற்சிகள் வெற்றி பெறலாம் அல்லது வெற்றிபெறாமல் போகலாம். ஆனால், அது எவ்வாறு அமைந்தாலும் விளைவுகளைச் சந்திக்கவேண்டியிருக்கும். தேர்தல் ஆணைக்குழுவினால் திகதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் கூட ஏதாவது வழியில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுமாக இருந்தால் அதை எதிரணிக் கட்சிகள் கடுமையாக எதிர்க்கும். அவை நிவாரணம் பெற நீதிமன்றங்களை நாடும். சிவில் சமூக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் இதில் இணைந்துகொள்ளும்.

அரசாங்கத்தின் அரசியல் மற்றும் பொருளாதார நிர்ப்பந்தங்களை கவனத்தில் எடுப்பதா அல்லது நேரடியாக சட்டத்தின் பிரயோகத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்பதே நீதிமன்றம் எதிர்நோக்கக்கூடிய கேள்வியாக இருக்கும். அண்மைய வழக்குகளில், மிகவும் குறிப்பாக ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றம் பெரிதும் விரும்பப்படுகின்ற முறைமை மாற்றத்தை சட்ட முறைப்படியான வழிமுறைகளின் மூலம் கொண்டுவருவதற்கு நாட்டத்தைக் காட்டியிருக்கிறது.

### போராட்ட இயக்கம்

தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று கோரி வீதிப்போராட்டங்களில் இறங்கவேண்டும் என்று பெருமளவு நெருக்குதல்கள் அரசியல் கட்சிகள் மீது பிரயோகிக்கப்படுகிறது. அவ்வாறு செய்வதற்கு எதிரணிக் கட்சிகள் துணிச்சல் கொள்ளலாம் ஏனென்றால், மக்கள் ஆதரவு இல்லாத காரணத்தால் தேர்தல் தோல்விக்கு அரசாங்கம் அஞ்சுகிறது என்று அவை ஒரு மதிப்பீட்டை செய்யக்கூடும். முறைகேடாக சொத்துகளைக் குவித்து வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தவறியிருக்கும் நிலையில், பொருளாதாரத்தைப் பாதுகாக்கவேண்டிய தேவை குறித்த அரசாங்கத்தின் கருத்தை பெருமளவுக்கு கவனத்தில் எடுக்கக்கூடிய நிலையில் மக்கள் இல்லை.

நேர்மைக்கேடான முறையில் வர்த்தகக் குழுக்கள் வெளிநாடுகளில் பதுக்கிவைத்திருக்கின்ற பணம் 53 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்தத் தொகை இலங்கையின் கடன்களை தீர்க்கப் போதுமானவை. கடுமையான வரிகளினாலும் பணவீக்கத்தினாலும் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் இதனால் பெரும் ஆத்திரமடைந்திருக்கிற்ர்கள். அந்த பணத்தை நாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இந்த கம்பனிகளுக்கும் தனிநபர்களுக்கும் எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை.

மக்களின் ஆதரவு மோசமாக குறைந்துபோயிருக்கும் பின்னணியில் போராட்ட இயக்கத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில் அரசாங்கத்தின் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லாத - ஜனநாயக தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதற்கு தயங்குகின்ற ஓர் அரசாங்கத்தின் சார்பில் நடவடிக்கைகளில் இறங்குவதால் ஏற்படக்கூடிய எதிர்விளைவுகள் குறித்து பாதுகாப்புப் படைகளும் அக்கறை கொள்ளக்கூடும். மக்களின் ஒரு பகுதியான ஆயுதப்படைகள் அவர்களுக்காக அவர்களுடன் நிற்கவேண்டும் என்று உணரக்கூடும்.

சர்வதேச மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையின் இரு முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிராக கனடா அரசாங்கம் விதித்த தடைகள் பாதுகாப்புப் படைகளுக்கு ஓர் எச்சரிக்கையாகும். அவர்கள் இருவருக்கும் நேர்ந்த கதி தங்களுக்கும் நேரலாம் என்று படையினர் உணரக்கூடும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் போராட்ட இயக்கத்தை எதிர்கொள்வதில் பாதுகாப்புப் படைகள் மிகுந்த கட்டுப்பாடான முறையில் நடந்துகொண்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தவேண்டியிருக்கிறது. தனது ஆணையை இழந்துவிட்டதாக தோன்றிய ஒரு ஜனாதிபதிக்கு ஆதரவாக - மக்களின் விருப்பத்துக்கு எதிராக செயற்பட பாதுகாப்பு படைகள் விரும்பவில்லை.

மறுபுறத்தில், அரசாங்கம் தேர்தலை நடத்த விடுவதற்கு தீர்மானித்தால் அதன் அச்சங்களையும் நடைமுறையில் காண நேரிடலாம். பொருளாதாரத்தை இயக்கநிலைக்கு கொண்டுவருவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் இயலாமை அதன் தேர்தல் வாய்ப்புகளுக்கு பாதகமாக அமையும். பொருளாதார உறுதிப்பாடு போன்ற ஒரு தோற்றப்பாட்டுக்கு மத்தியில் எரிபொருள் நிலையங்களுக்கு வெளியே நீண்ட வரிசைகள் இல்லாமலும் நீண்ட நேர மின்வெட்டு இல்லாமலும் இருக்கின்ற அதேவேளை பொருளாதாரம் அதிகப்பெரும்பான்மையான மக்களுக்கு சிறிய வருமானத்தையே கொடுக்கிறது. அவர்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு பெரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த வருடம் 8 சதவீதத்தினால் சுருங்கிய அதேவேளை இவ்வருடம் 4 சதவீதத்தினால் சுருங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி இன்னமும் கிட்டாத நிலையில் பொருளாதார வளர்ச்சி நோக்கங்களுக்கான சர்வதேச கடனுதவிகளை அரசாங்கத்தினால் பெறமுடியாமல் இருக்கிறது.

### உறுதிமொழி

உள்ளூராட்சித் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு குறிப்பிடத்தக்க ஒரு தோல்வி அல்லது முற்றுமுழுதாக துடைத்தெறியப்படும் நிலை கூட ஏற்பட்டால், அதன் நியாயப்பாடு மேலும் குறைந்துவிடும். தேர்தல் பின்னடைவுக்குப் பிறகு தீர்மானங்களை எடுப்பதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்கத்தின் ஆற்றலில் எதிர்மறையான தாக்கம் ஏற்படும். 2020 ஒகஸ்ட் பொதுத்தேர்தலில் பெற்ற ஆணையை வைத்துக்கொண்டு தற்போது அரசாங்கம் பதவியில் இருப்பதற்கு நியாயப்பாடு இருப்பதாக உரிமை கோரக்கூடியதாக இருக்கிறது. அந்தத் தேர்தலில் அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அண்மித்தான வெற்றி கிடைத்தது. இப்போது கூட 225 ஆசனங்களில் 134 ஆசனங்களை அது கொண்டிருக்கிறது.

ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து விலக வைப்பதில் கடந்த வருடம் போராட்ட இயக்கம் கண்ட வெற்றி முன்னைய அந்த ஆணையின் நியாயப்பாட்டை வலுவிழக்கச்செய்துவிட்டது. அவருக்குப் பிறகு பதவிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் மற்றும் இராணுவ பலத்தை மிகவும் சாதுரியமான முறையில் பிரயோகித்து போராட்ட இயக்கத்தை வலுவிழக்கச்செய்வதில் வெற்றிகண்டார். ஆனால், உள்ளூராட்சித் தேர்தல்களில் அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய ஒரு தோல்வி பயனுடைய முறையில் ஆட்சியைத் தொடர்வதில் அரசாங்கத்தின் ஆற்றலை பலவீனப்படுத்திவிடும்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படுகின்றனவோ இல்லையோ, அடுத்தகட்டப் போராட்ட இயக்கம் பிரதான அரசியல் எதிரணிக் கட்சிகளின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும். அது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தலைமைத்துவம் இல்லாமல் தன்னியல்பாக மூண்ட முதல் கட்ட போராட்டத்தைப் போன்று இருக்காது. கடந்த வருடம் முன்னாள் ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் பதவிவிலகியபோது போராட்ட இயக்கத்தினால் சொந்த தலைமைத்துவத்தின் மூலம் அதை பதிலீடு செய்யக்கூடியதாக இருக்கவில்லை.

ஆனால், இனிமேல் போராட்ட இயக்கத்துக்கு பிரதான எதிரணிக் கட்சிகளே தலைமைதாங்கி வழிநடத்தும். பொதுத்தேர்தலை நடத்தவேண்டும் என்பதே அவர்களது பிரதான கோரிக்கையாக இருக்கும். பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இரண்டரை வருடங்கள் நிறைவடைந்து அதை எந்த நேரத்திலும் கலைக்கக்கூடிய அதிகாரத்தை ஜனாதிபதி பெறும் தருணத்துடன் சமாந்தரமானதாக அந்த கோரிக்கை அமையும். இத்தகைய சூழ்நிலையில், கடந்த மூன்று மாதங்களாக உறுதியளித்து வரும் அரசியல் சீர்திருத்தங்களை ஜனாதிபதி முன்னெடுப்பதற்கான கால எல்லை சுருங்கிப்போகும்.

நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து நீடித்து வருகின்ற சிக்கலான இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி அளித்த உறுதிமொழி இன மற்றும் மத சிறுபான்மை இனங்கள் மத்தியில் குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் பெரும் நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கிறது. ஜனாதிபதியும் வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பான்மையான தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரச்சினைகளை அடையாளம் கண்டிருக்கிறார்கள்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் எந்தவிதமான குற்றச்சாட்டும் சுமத்தப்படாமலும் கூட பல வருடங்களாக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுதலை செய்தல், பயங்கரவாதத்தை இரத்துச் செய்தல், சொத்துக்குரியவர்களின் உரிமைகளைக் கருத்தில் எடுக்காமல் இராணுவத்தினாலும் தொல்பொருளியல் திணைக்களத்தினாலும் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், கடந்த கால மனித உரிமை மீறல்களை விசாரணைசெய்து மனக் காயங்களை குணப்படுத்துவதற்கான வழிவகைகளை முன்வைப்பதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைத்தல் என்பனவே அவையாகும்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைத்தால் நாட்டில் தேசிய ஐக்கியம், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திக்கு குறுக்கே நிற்கும் தடைகளை அகற்றி, நோபல் சமாதானப் பரிசு கமிட்டியினால் பரிசீலிக்கப்படக்கூடிய முன்னுதாரணத்தை உலகிற்கு காட்டிய ஒரு தலைவராக இலங்கையின் வரலாற்றில் தனது முத்திரையைப் பதிக்கமுடியும்.

## இன்றைய நாளில்..

* 1531 – போர்த்துக்கல், லிஸ்பன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 30,000 பேர் வரையில் உயிரிழந்தனர்.
* 1924 – சென்.பீட்டர்ஸ்பேர்க் லெனின்கிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
* 1950 – இந்தியா குடியரசு நாடானது. ராஜேந்திர பிரசாத் அதன் முதலாவது குடியரசுத் தலைவரானார்.
* 1962 – ரேஞ்சர்-3 விண்கலம் சந்திரனை ஆராய விண்ணுக்கு ஏவப்பட்டது. ஆனாலும், இது 22,000 மைல்களால் சந்திரனைத் தவறவிட்டது.
* 1965 – ஹிந்தி இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியானது.

## நக்கல் நமசிவாயம்



# இறைவரித் திணைக்களத்தின் பணிகளை வினைத்திறனாக மேற்கொள்ள கோபா குழுவால் புதிய முன்மொழிவுகள்

## வருமான முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு எனப்படும் RAMIS கட்டமைப்பை முறையாக செயற்படுத்த இரண்டு உப குழுக்கள்







உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிகளை மேலும் வினைத்திறனாக மேற்கொள்ள அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் (கோபா) புதிய முன்மொழிவுகள் பல வழங்கப்பட்டன. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி வருமானத்தை சேகரிப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள பிரதான கணினிக் கட்டமைப்பான வருமான முகாமைத்துவத் தகவல் கட்டமைப்பை (RAMIS) முறையாகச் செயற்படுத்துவதற்கு இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷீம் தலைமையில் நேற்று முன்தினம் (24) பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

நிதி அமைச்சின் கீழ் காணப்படும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தமது வரி வருமானத்தை சேர்த்துக்கொள்வதன் வினைத்திறனை அதிகரிப்பதற்கு 2014ஆம் ஆண்டில் வருமான முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு (RAMIS) எனும் மென்பொருள் கட்டமைப்பை ஆரம்பித்து அதற்காக சுமார் 10 பில்லியன் ரூபா முதலீடு செய்துள்ளதாகவும், எனினும், அது முறையாக செயற்படுவதில்லை என்பதற்கான தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதன்போது கோபா குழு சுட்டிக்காட்டியது.

குறிப்பிட்ட கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் மேலும் பாரிய நிதியை இதுவரை செலவிட்டுள்ளதாக தான் நம்புவதாகக் குறிப்பிட்ட குழுவின் தலைவர், மேலும் இதற்காக நிதிச் செலவு செய்வது பயனுள்ளதா என்பது தொடர்பில் கண்டறிவது அவசியம் என வலியுறுத்தினார்.

இதன்போது கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டதாவது, குறித்த கட்டமைப்பு தொடர்பான சேவை உடன்படிக்கை மற்றும் அதற்கான நிதி செலுத்துதல் பற்றிய தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தமக்கு வழங்குவதில்லை என தெரிவித்தார். விசேடமாக, உடன்படிக்கைக்கு அமைய தமக்கு அந்தத் தகவல்களை வழங்க முடியாது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கூறுவதாகவும், அது அரசியலமைப்புக்கு முரணானது என சுட்டிக்காட்டினார்.

இதுபற்றி, உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிடும்போது, 2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மென்பொருள் கட்டமைப்பு 2017இல் கொண்டுவரப்பட்ட புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்துக்கு அமைய இற்றைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளதாக குறிப்பிட்டனர். குறித்த மென்பொருள் கட்டமைப்பை தயாரித்த சிங்கப்பூர் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் தகவல்களை வெளியாருக்கு வழங்குவதில் சிக்கல் காணப்படுவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். மேலும், இந்த உடன்படிக்கை இரு அரசுகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்பதால் அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் அரசின் தலையீடு பொருத்தமானது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, RAMIS கட்டமைப்புத் தொடர்பான கொள்முதல் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பில் சிக்கல் நிலைமை காணப்படுவதால் இந்தக் கட்டமைப்பை நாட்டுக்குப் பொருத்தமான வகையில் செயற்படும் நிலைமைக்கு கொண்டுவர முடியுமா என்பது தொடர்பில் விசாரணை செய்து முடிவை வழங்குவதற்காக கோபா குழுவினால் இரண்டு உப குழுக்களை நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டது.

நிதி அமைச்சின் செயலாளரின் தலைமையில், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து நியமிக்கப்படவுள்ள குழுவினால் RAMIS உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட சட்டரீதியான நிலைமைகளை விசாரணை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மொரட்டுவ பல்கலைக்கழகம், இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA), உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சு ஆகியன இணைந்து நியமிக்கப்படும் குழுவினால் குறித்த மென்பொருள் கட்டமைப்பை இற்றைப்படுத்த முடியுமா என்பது தொடர்பில் கண்டறியப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பான முடிவுகள் அடங்கிய அறிக்கைகளை 06 வாரங்களுக்குள் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்கு சமர்ப்பிக்க இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ஜே.சி.அலவதுவல, வடிவேல் சுரேஷ், டீ.வீரசிங்க, சஹன் பிரதீப் விதான, ஹரிணி அமரசூரிய மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# தீப்பற்றியெரிந்த மனைவியைக் காப்பாற்ற முயன்ற கணவனுக்கும் தீக்காயம்

## பேருவளையில் சம்பவம்

நான்கு பிள்ளைகளின் தாயொருவர் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளித்த நிலையில், தீயை அணைக்கச் சென்ற கணவருக்கும் தீக்காயம் ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பேருவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பேருவளை சமத் மாவத்தையில் வசிக்கும் 28 மற்றும் 24 வயதுடைய தம்பதியரே இவ்வாறு தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவருக்கும் இடையே குடும்பத் தகராறு ஏற்பட்டதாகவும், அதன் காரணமாக நேற்று முன்தினம் (24) மதியம் தகராறு ஏற்பட்டு, மனைவி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டதாகவும் தெரியவந்துள்ளது.

அவரது உடலில் தீப்பற்றியதால், தீயை அணைக்க முயன்ற கணவருக்கும் தீக்காயம் ஏற்பட்டது. இருவரும் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மனைவியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

பிரதான பொலிஸ் பரிசோதகர் லலித் பத்மகுமாரவின் பணிப்புரைக்கமைய, பொலிஸ் பரிசோதகர் கயான் கிரிஷாந்த தலைமையில் குற்றப் பிரிவினர் குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

# காரைநகரில் அனுமதியின்றி கூடும் சந்தைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பிரதேச சபைத் தவிசாளர் பாலச்சந்திரன் எச்சரிக்கை

காரைநகர் பிரதேச சபையின் எல்லைக்குள் சட்ட விரோதமான முறையில் சந்தை கூடினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பகுதியிலுள்ள வீதியில் நேற்று (25) சந்தை கூடியமை தொடர்பில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து அவரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் காரைநகர் - சக்கலாவோடை பகுதியில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் உள்ளூர் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான சந்தை தொகுதி ஒன்றை திறந்துவைத்துள்ளோம்.

இதற்கு முன்னர் தனியார் ஒருவருக்கு சொந்தமான காணியை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு எடுத்து அந்தச் சந்தையில் காணியை அமைத்திருந்தோம். ஆனால், தற்போது எமக்கான ஒரு சந்தை கட்டடத் தொகுதியை நாங்கள் திறந்துள்ளோம். ஆகையால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் உங்களது உற்பத்திகளை சக்கலாவோடை சந்தையில் சந்தைப்படுத்தலாம்.

நாங்கள் குத்தகைக்கு எடுத்த தனியாரின் காணியை நேற்று (25) காணி உரிமையாளரிடம் ஒப்படைக்கவுள்ளோம். எனவே, இனிமேல் அங்கு யாரும் சந்தை கூடமுடியாது. அவ்வாறு கூடினால் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், வீதிகளில் சட்டவிரோதமாக கூடும் சந்தைகள் மீது பொலிஸார் மற்றும் பொதுமக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

எனவே, காரைநகர் பகுதி வியாபாரிகள் இனிமேல் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# களுத்துறை மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கு தாக்கல்செய்யப்பட்ட 17 வேட்பு மனுக்களில் 13 நிராகரிப்பு

(பேருவளை பீ.எம்.முகதார்)

களுத்துறை மாவட்டத்திலுள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 13 வேட்புமனுக்கள் நிராகரிக்கப் பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்தார். பத்து (10) பிரதான அரசியல் கட்சிகளினதும் மூன்று (3) சுயேச்சைக் குழுக்களினதும் வேட்புமனுக்கள் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் காக களுத்துறை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் என 167 குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியதோடு, அவற்றுள் 142 குழுக்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன்படி 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் போட்டியிட அரசியல் கட்சிகளின் 111 குழுக்களும் 18 சுயேச்சைக் குழுக்களுமாக 129 குழுக்கள் தகுதிபெற்றுள்ளன.

களுத்துறை மாவட்டத்தில் நான்கு (4) நகர சபைகள் மற்றும் 13 பிரதேச சபைகளுக்குமாகவே 129 குழுக்கள் போட்டியிடுகின்றன.

# சீனத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி மோசடி

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கையின் ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சருக்கு சீனத் தூதரகத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களில் வெளியான கடிதம் போலியானது என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.


中华人民共和国大使馆

15th January 2023, Colombo

His Excellency Ranil Wickremesinghe,

The People's Republic of China express their [illegible] attitude to the Government of Sri Lanka. We express our [illegible] towards the deteriorating economic situation in Sri Lanka. [illegible] committed to support Sri Lanka in the best [illegible] including efforts from its local government, [illegible] companies and schools, to overcome the current difficulties [illegible] Sri Lanka. During this hardship, China has provided Sri Lanka [illegible] with close to $2.8 billion in financial support. In order to help Sri Lanka to overcome its current difficulties, Chinese financial institutions reached out to Sri Lankan authorities and expressed their readiness to help them to find a proper way to combat its matured debts. China has long been providing Sri Lanka with support to its socio-economic development through infrastructure projects, generating around 11,000 jobs in the country.

Economic crisis and debt burden of Sri Lanka has deep structural roots and requires financial support from International Organizations. The Chinese economy is still recovering from the shocks of the Covid-19 pandemic, which is pushing up the inflation levels in the country. Further our banking sector is already stressed due to the slowdown in the [illegible] sector. Therefore, we regret to inform that China would not be able to amortise the outstanding debt. However, [illegible] relax the repayment schedule by offering a 5-year moratorium on bilateral and commercial loan repayments. Keeping [illegible] the already stressed Banking sector of China, the interest [illegible] for this period would be compounded quarterly at the same rate mentioned in the respective loan agreements.

We also urge the Western countries led by the US, along with International Organizations like the IMF to step up and offer any further assistance to Sri Lanka.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட குறித்த கடிதத்தில் இருதரப்பு, வணிகக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 5 ஆண்டுகால அவகாசத்தை வழங்குவதன் மூலம் திருப்பிச் செலுத்தும் அட்டவணையைத் தளர்த்த சீனா தயாராக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை மறுத்துள்ள சீனத் தூதரகம், தனது உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பின் கீழ், இலங்கை ஜனாதிபதி மற்றும் நிதியமைச்சருக்கு எழுதப்பட்ட சமூக ஊடகங்களில் பரவும் கடிதம் முற்றிலும் போலியானது என்றும் தெரிவித்துள்ளது.

எனவே, உத்தியோகபூர்வ தகவல் ஆதாரங்களை மட்டுமே பின்பற்றுமாறு தூதரகம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதியுதவி பெறும் முயற்சியில் இலங்கை தனது சர்வதேச கடன் வழங்குனர்களிடம் கடன் மறுசீரமைப்புக்கான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துவரும் நிலையில், இந்த போலி கடிதம் பகிரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலாவதியான பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த 20 வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ். மாநகர சபை பகுதியில் அமைந்துள்ள பலசரக்கு வர்த்தக நிலையங்கள் கிரமமாக ஒவ்வொரு மாதமும் யாழ். மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த டிசம்பர் மாதம் 11ஆம், 12ஆம் திகதிகளிலும் ஜனவரி மாதம் 17ஆம், 18ஆம் திகதிகளிலும் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் யாழ். மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பலசரக்கு வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது திகதி காலாவதியான உணவுப் பொருட்கள், பழுதடைந்த உணவுப் பொருட்கள், உரிய முறையில் சுட்டுத்துண்டு இடப்படாத உணவுப் பொருட்கள் மற்றும் வண்டு மொய்த்த உணவுப் பொருட்கள் என ஏராளமான மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருட்கள் மாநகர சபைக்கு உட்பட்ட யாழ். நகர், நல்லூர், வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பிரிவுகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்களை நீதிமன்றில் ஒப்படைத்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் 20 கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நேற்று மேலதிக நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கடை உரிமையாளர்கள் அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்ட நிலையில், 20 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் மொத்தமாக 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் நீதிமன்றால் விதிக்கப்பட்டது.

## 25.01.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 143 643 | 154 4754 |
| கனேடியன் டொலர் | 157 032 | 17 065 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 1072 | 44 3 80 |
| யூரோ | 28 4772 | 3 5 1826 |
| ஜப்பான் யென் | 1 6375 | 1 7500 |
| சிங்கப்பூர் டொலர் | 160 4782 | 172 432 |
| ஸ்ரேலிங் பவுன் | 331 1858 | 348 0066 |
| சுவிஸ் பிரான்ங் | 276 2226 | 3 4 8833 |
| ஐ.அ.டொலர் | 25 3801 | 260 28 8 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 4618 |
| குவைட் | குவைட் தினார் | 0,075 21 7 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 5154 |
| கட்டார் | கட்டார் றியால் | 88,0 14 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 35 1 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4868 |

# 2 கிலோ கேரள கஞ்சாவுடன் கெக்கிராவயில் ஒருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

கெக்கிராவ மரதன்கடவல தோறுவெவ பகுதியில் இரண்டு கிலோவிற்கும் அதிகமான கேரள கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை மரதன்கடவல பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (24) மாலை மரதன் கடவல தோறுவெவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், இரண்டு கிலோவும் 650 கிராமும் நிறையுடய கேரள கஞ்சாவை மரதன் கடவல பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 29 வயதுடய மரதன் கடவல தோறுவெவ பகுதியைச் சேர்ந்தவரென ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மரதன்கடவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கெக்கிராவ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.01.24
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5010 | ரூ. 16,864,649.00 | D | 1 0 3 4 4 4 |
| கொவிசெத | 3252 | ரூ. 73,373,109.20 | Y | 47 49 55 69 |
| ஜாதிக சம்பத | 1465 | ரூ. 13,687,248.00 | மகரம் | 4 1 3 4 2 9 |
| தன நிதானய | 1040 | ரூ. 80,213,233.20 | A | 32 44 48 57 |
| ராசி சுப பலன் (Handahana) | 319 | ரூ. 2,569,327.60 | விருச்சிகம் (விசேட இலக்கினம்: விருச்சிகம்) | 10 21 46 59 |
| மெகா பவர் | 1358 | ரூ. 294,943,134.00 | R (சுப்பர் இலக்கம் 18) | 18 26 47 48 |

மெகா பவர்: அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த மிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00






மாண்புமிகு இந்திய
ஜனாதிபதி திரௌபதி முர்மு



இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது இந்திய பிரதமர் மாண்புமிகு ஸ்ரீ நரேந்திரமோடியின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையை மீள உறுதிப்படுத்தினார்.



இந்தியப் பிரதமர்
ஸ்ரீ நரேந்திர மோடி



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் அவர்கள், பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களை சந்தித்தபோது, போக்குவரத்து மற்றும் கல்வித் துறையில் குறிப்பாக, முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தினார்.

> “இந்தியா ஒரு நம்பகரமான அண்டை நாடு, நம்பகமான பங்குதாரர், தேவை என்று உணரும்போது இலங்கையுடன் கூடுதல் மைல் தூரம் செல்லத் தயாராக இருப்பவர் என்பதை நான் விவரிக்க விரும்புகிறேன்.”
>
> டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர்
> வெளியுறவுத்துறை அமைச்சர் -
> இந்தியா



இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கருடன், உட்கட்டமைப்பு, தொடர்பாடல், எரிசக்தி, கைத்தொழில் மற்றும் சுகாதாரத்துறைகளில் ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தியது.

# உயர் ஸ்தானிகரின் செய்தி



கோபால் பாக்லே
இந்திய உயர் ஸ்தானிகர்

ஆயுபோவன், வணக்கம், நமஸ்கார்!!

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள சகல இந்தியர்களுக்கும், இலங்கையைச் சேர்ந்த எனது சகோதர சகோதரி களுக்கும் நல்வாழ்த்துகள்.

இவ்வருடம் இலங்கையும் தனது சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் அதேவேளை, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 75 ஆண்டுகள் நிறைவையும் இவ்வருடம் குறித்துநிற்கின்றது. இந்தியா தனது சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவை கடந்த வருடம் கொண்டாடியது. இந்நிலையில், மிகவும் நெருக்கமான உறவைக்கொண்டிருக்கும் அயல்நாடுகளாகவும் நண்பர்களாகவும் அடுத்த 25 ஆண்டுகளுக்கான முன்னேற்றம் மற்றும் சுபீட்சத்துக்காக இந்தியாவும் இலங்கையும் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த வருடத்தில் முன்னொருபோதுமில்லாத வகையில் கிட்டத்தட்ட நான்கு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இந்தியாவால் இலங்கை மக்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. இவ்வருடம் இலங்கையின் கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதி ரீதியான உத்தரவாதத்தை வழங்கவும் இருதரப்புக் கடன் வழங்குனராக முதலில் முன்வந்த நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கைக்கு அமைவாக இலங்கை மக்களின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கான இந்தியாவின் வலுவான அர்ப்பணிப்பினை இவ்வாறான செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன.

அண்மையில் வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்ஷங்கர் அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயம் காரணமாக உட்கட்டமைப்பு, உற்பத்தித்துறை மற்றும் தொடர்புகளை மேம்படுத்தல் ஆகியவற்றில் முதலீடுகளை மேற்கொண்டு மேலதிக ஒத்துழைப்பினை உருவாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டில் இலங்கையின் பாரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியா காணப்படும் அதேநேரம், இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

மேலும், வர்த்தக நடவடிக்கைகளுக்காக ரூபாவைப் பயன்படுத்துவது இலங்கையின் பொருளாதாரத்திற்கு மேலும் ஆதரவினை வழங்கும் ஒரு நடவடிக்கையாகும். இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் பொருளாதார வளர்ச்சியை நோக்கிய உறுதியான செயற்பாடுகளாகும்.

கடந்த வருடம் இலங்கையின் சுற்றுலாத் துறைக்கான மிகப்பெரிய மூலாதாரமாக மீண்டும் ஒருமுறை இந்தியா காணப்பட்டமை குறித்து நான் மிகவும் மகிழ்வடைகின்றேன். சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையில் விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமையானது இரு நாடுகளினதும் மக்களிடையிலான தொடர்புகளை மேலும் நெருக்கமாக்குவதில் இன்னொரு முக்கிய படிநிலையாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான கப்பல் சேவைகள் இதனை மேலும் வலுவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய - இலங்கை உறவுகளில் அண்மையில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகள் எமது நட்புறவையும் சகல துறை ஒத்துழைப்பினையும் மேலும் வலுவாக்கியுள்ளன. அதேநேரம், விசேடமாக கடல்சார் பாதுகாப்பு விவகாரங்கள் உட்பட பொதுவான சவால்களை எதிர்கொள்வதில் இரு நாடுகளும் தொடர்ந்து தயார் நிலையில் உள்ளமை மற்றொரு சிறப்பம்சமாகும்.

2023 பெப்ரவரி நான்காம் திகதி இலங்கை தனது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் நிலையில், அழகிய இத்திருநாட்டின் மக்களுக்கு 75ஆவது சுதந்திர தின நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும். அத்துடன், இந்தியா தொடர்ந்தும் இலங்கையுடன் இணைந்திருக்குமென உறுதியளிக்கின்றேன்.









இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்கிய உலகளாவிய தெற்கு நாடுகளின் உச்சிமாநாட்டின் தலைவர்களின் இறுதி அமர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்








# இலங்கையில் பொருளாதார மீட்சியினை துரிதப்படுத்துதல்



## இந்திய ரூபாவில் வர்த்தகம்

இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஜூலை 2022இல் சர்வதேச வர்த்தக தீர்வை Vostro/Nostro கணக்குகள் மூலம். இந்திய ரூபாவில் [INR ] அனுமதிக்க முடிவு செய்தது.இலங்கை மத்திய வங்கி [CBSL] ஆனது INRஐ 'நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக' சேர்த்துள்ளது. இலங்கை வங்கிகளின் விண்ணப்பங்கள் INR இல் வர்த்தக தீர்வுக்காக RBIஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

இலங்கைக்கு முன்னோக்கிச் செல்லும் வழியை தெளிவுபடுத்துவதற்கும், சர்வதேச நாணய நிதிய கடன் பெறும் திட்டத்திற்கு வழிவகுக்கும் பொருட்டும் நாணய நிதியத்திற்கு எழுத்துபூர்வமாக நிதியளிப்பு உத்தரவாதத்தை வழங்கிய முதல் கடன்வழங்குனர் நாடு இந்தியா.



"இந்தியா மற்றவர்களுக்காகக் காத்திருக்காமல், சரியானது என்று நாங்கள் நம்புவதைச் செய்ய முடிவு செய்தது. இலங்கை முன்னோக்கிச் செல்வதற்கான வழியைத் தெளிவுபடுத்துவதற்காக, சர்வதேச நாணய நிதியத்திற்கு நிதியளிப்பு உத்தரவாதங்களை நாங்கள் வழங்கினோம்."

டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர்
இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்

## அடுத்த தலைமுறைக்கான முதலீடு:



IID மெட்ராஸின் முதுநிலை கற்கைநெறிகளை இலங்கையில் ஆரம்பிப்பது தொடர்பாக ஒக்டோபர் 2022இல் SLTC மற்றும் IIT மெட்ராஸ் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.



## இந்தியாவுக்கான ஏற்றுமதி 15%ஆல் அதிகரிப்பு

512 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 588 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

ஆதாரம்: https://commerce.gov.in/trade-statistics/export-import-data-bank-annual/





சென்னைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்கியது. 12 டிசம்பர் 2022 அன்று சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு முதல் பயணம் ஆரம்பமானது. இந்தியா மற்றும் இலங்கை மக்களுக்கு இடையேயான தொடர்புகளை வலுப்படுத்துதல். பொருளாதார வளத்தை மேம்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

## தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன் உள்நாட்டு பொருளாதாரத்தை வலுப்படுத்தல்





இலங்கையில் இந்தியா முன்னணி முதலீட்டாளராக உள்ளது.

மொத்த முதலீடு சுமார் 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இலங்கையில் சமீபத்திய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் இந்திய முதலீடுகள் தொடர்ந்தன.

HCL டெக்னாலஜிஸ் இலங்கையில் சுமார் 2000 தொழில்களை ஏற்படுத்தியதுடன், 90%க்கும் அதிகமான உள்நாட்டு மக்களுக்காக வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் அமைத்துள்ள கொழும்பு மேற்கு சர்வதேச முனையத்தில் 650 மில்லியன் டொலர்களுக்குமேல் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

நில ஆதனம் மற்றும் மருத்துவத் துறையில் முதலீடுகள் தொடர்கின்றன.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கொள்கை ரீதியான ஒப்பந்தம் உள்ளது. இருதரப்பு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கட்டமைப்பு, கூட்டு முயற்சி மற்றும் பங்குதாரர்களின் ஒப்பந்தம் கையெழுத்தானது

இது சம்பூரில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்க துரிதப்படுத்துகிறது.



# குருநகர் புனித யாகப்பர் ஆலய யோசப்வாஸ் இளையோர் மன்றத்தின் 30ஆவது ஆண்டுவிழா








குருநகர் புனித யாகப்பர் ஆலய யோசப்வாஸ் இளையோர் மன்றத்தின் 30ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்திய கலைவிழா நேற்று முன்தினம் (24) மாலை 5.30 மணியளவில் குருநகர் கலையரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

குருநகர் யோசப்வாஸ் இளையோர் மன்றத் தலைவர் விக்ரர்குமார் சுரேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மனித முன்னேற்ற நடுநிலை இயக்குனர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குநரும் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தையுமான அருட்பணி அருளானந்தம் யாவிஸ் அடிகளாரும் குருநகர் பங்கின் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி தயதீபன் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். சிறப்பு விருந்தினர்களாக பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய பங்குத்தந்தையும் குருநகர் பங்கின் முன்னாள் பங்குத்தந்தையுமான அருட்பணி ஆர்.சி.எக்ஸ். நேசராஜா அடிகளாரும், புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியரும் குருநகர் யோசப்வாஸ் இளையோர் மன்ற மகிமை அங்கத்தவருமான யேசுதாசன் இக்னேசியஸ் பிரபாவும் கலந்து சிறப்பித்தனர்.

இக்கலைவிழாவில் குருநகரின் ஆரம்ப தொழிலாகிய கரைவலை தொழில் தற்போது பயில் நிலையில் இல்லாதபோதிலும் அத்தொழிலில் பாடப்படுகின்ற அம்பா பாடல்கள் அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்காட்டும் நிகழ்வாகவும், சமூகத்தின் மத்தியில் விவாத நிகழ்வுகள் அருகி வரும் நிலையில் சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் நிகழ்வாக ''பிள்ளைகளின் வளர்ச்சியில் அதிகம் பங்காற்றுவது பெற்றோரா, சமூகமா'' எனும் தொனிப்பொருளில் பட்டிமன்றமும், குருநகர் வரலாற்றிலேயே முதல் முறையாக வடமோடிக்கூத்து வீரன் தாவீதன் இளையோரால் மேடையேற்றப்பட்டது.

சிறப்பு நிகழ்வாக இலங்கை கூடைப்பந்தாட்ட அணி ஆசிய கிண்ணத்தை சுவைக்க பெரிதும் பங்காற்றிய குருநகர் மண்ணின் வீராங்கனை எப்சிபாவுக்கான கௌரவம் மற்றும் விருதும் வழங்கப்பட்டது. அத்தோடு 2020, 2021ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோருக்கான கௌரவம் மற்றும் போதை விழிப்புணர்வு கரோல் நிகழ்வில் பங்குபற்றியோருக்கான கௌரவிப்பும் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மன்ற மகிமை அங்கத்தவர்கள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்தோடு, அனைத்து மக்களாலும் இக்கலை விழா பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளராக தீபன் திலீசன்

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாநகர சபையின் முதன்மை வேட்பாளராக தீபன் திலீசன் போட்டியிடவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று கட்சி அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சியின் மத்திய குழுவில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக கட்சியுடன் இணைந்து செயல்படுகின்றோம. முக்கியமான காலகட்டத்திலும் கட்சியுடன் இணைந்து பயணித்ததன் அடிப்படையில் மத்திய குழுவில் யாழ். மாநகர சபையின் முதன்மை வேட்பாளராக அவர் களமிறக்கப்படவுள்ளார். மக்களால் நிராகரிக்கப்பட்ட மொட்டுடன் யானை கூட்டு சேருவது வேடிக்கையான விடயம்.

வடக்கில் உள்ள நிலைமைபோல்தான் தெற்கிலும் நிலைமை இருக்கும். வடக்கில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர மற்றைய அனைத்து தரப்புகளும் மக்கள் மட்டத்தில் செல்வாக்கை இழந்து கொண்டுபோகின்ற கட்டத்தில் அவர்கள் நினைக்கின்றார்கள் பிரிந்து நின்றால் செல்வாக்கை கூட்டலாம் என்று. அது மட்டும்தான் வித்தியாசம்.

தெற்கில் மொட்டு மற்றும் யானை செல்வாக்கை முற்றுமுழுதாக இழந்திருக்கின்ற நிலையில் மொட்டு தேர்தலில் நிற்கவே முடியாத அளவுக்கு நிலைமை உள்ளது. தேர்தல் காலத்தில் யானை முற்றுமுழுதாக தூக்கி எறியப்பட்ட நிலையிலே அவர்கள் கூட்டு சேர்ந்தால் மக்கள் செல்வாக்கு எடுக்கலாமென்று நினைக்கிறார்கள். யதார்த்தத்திற்கு முரணான வகையில் சிந்தித்து வெற்றி பெறலாம் என்று நினைத்து ஏதோ நடவடிக்கை எடுப்பதாக நினைக்கின்றார்கள்.

மக்களின் உண்மையான யதார்த்தம் மாறப்போவதில்லை. மாறாக மக்கள் எப்படி பார்ப்பார்கள் என்றால் நாங்கள் செய்தி ஒன்றை அவர்களுக்கு கொடுக்கப் போகின்றோம். ஆனால், அவர்கள் விளங்கிக்கொள்கிறார்கள் இல்லை என சிந்திப்பார்கள்.

தெற்கில் ராஜபக்ஷக்களுக்கு மக்கள் மத்தியில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷவை கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பதனால் தான் தப்பித்துக்கொள்ளலாம் என நினைப்பது ஒரு வேடிக்கையான விடயமாகவே காணப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக உலகமே நிராகரிக்கின்ற கடந்த தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுத்ததற்காக மொட்டுடன் யானை கூட்டு சேருவது என்பது வேடிக்கையான விடயமாகும் - என்றார்.

# சைக்கிள் சின்னத்தைப் பிரபல்யப்படுத்தும் யாழ். எம்.பி



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் சைக்கிளில் தனது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையால் எரிபொருளை சிக்கனப் படுத்தும்முகமாக தான் சைக்கிளில் பயணம் செய்வதாக தெரிவித்துள் ளார். ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்களிலும் கார்களிலும் பயணம் செய்யும் நிலையில் செல்வராசா கஜேந்திரன் சைக்கிளில் தனது அன்றாடச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# இராசகலை தோட்ட மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும்

## இ.தொ.காவின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் தெரிவிப்பு

(அவிசாவளை நிருபர்)

பலாங்கொடை இராசகலை இல :01 பகுதியில் தமிழ் மற்றும் பெரும்பான்மை இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பு சம்பவத்தினை தொடர்ந்து குறித்த பிரதேசத்தின் மக்கள் இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாளுக்கு தெரிவித்ததை தொடர்ந்து அவர் குறித்த தோட்டத்திற்கு நேரடியாக சென்று மக்களை சந்தித்துள்ளார்.

இச் சம்பவமானது இராசகலை நகரை அண்மித்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதுடன், முதலில் தமிழ் இளைஞர்களே தாக்கப்பட்டுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதுடன், இச்சம்பவத்தில் மூன்று தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. தாக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் மற்றும் பெரும்பான்மையின இளைஞர்கள் பலாங்கொடை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதனை தொடர்ந்து, இச்சம்பவத்துடன் தொடர்புடைய தமிழ் இளைஞர்களை மாத்திரம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், இதுவரை எந்த ஒரு பெரும்பான்மை இனத்தவரும் கைது செய்யப்படவில்லை என பிரதேச மக்கள் ரூபன் பெருமாளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

அதேவேளை, குறித்த பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நகரத்திற்கு செல்ல முடியாத வண்ணம் அச்சுறுத்தல்களும் இருப்பதாக பிரதேசவாழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளதாகவும்,



இரத்தினபுரி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் ரூபன் பெருமாள் மேலும் தெரிவித்தார்.

குறித்த பிரதேச வாழ் தமிழ் மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நகரை கடந்து செல்ல வேண்டியிருப்பதால் குறித்த மக்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# 35 வருட அதிபர் சேவையிலிருந்து ஓய்வு

(கண்டி செய்தியாளர்)



தேசிய மட்ட 'குரு பிரபா பிரதீபா' விருதை மூன்று முறைகளும் மத்திய மாகாணத்தின் 'சில்பாபிமானி', 'வித்தியா செம்மல்' விருதுகளை இரண்டு முறைகளும் பெற்ற அக்குறணையைச் சேர்ந்த அதிபர் எஸ்.எச்.எம். நியால்தீன் 35 வருடகால அதிபர் சேவையில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

பட்டகொல்தெனிய ஜமாலியா மகா வித்தியாலயம், பங்கொல்லாமட லுக்மானியா மகா வித்தியாலயம், தெழும்புகஹவத்தை மாதிரிப் பாடசாலை ஆகியவற்றில் அதிபராக கடமையாற்றியுள்ளார்.

இவர் அக்குறணை, தெழும்புகஹவத்தை மாதிரிப்பாடசலையின் வெற்றிகரமான அதிபராக இருந்து ஓய்வுபெற்றுள்ளமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். காரணம், கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் மிகப் பின்தங்கிய ஒரு பாடசாலையை பெற்றோர்களின் உதவிகொண்டு ஒரு மாதிரிப் பாடசாலையாக மாற்றி இன்று வரை அதனை வழி நடத்தியமை அவரின் சேவைக்கு ஒரு சான்றாகும்.

கண்டி மாவட்டத்தில் ஆரம்பப் பிரிவு மாதிரிப்பாடசாலை ஒன்றை அமைத்து வழி நடத்திய பெருமை இவரைச் சாரும். 90 சதவீதம் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளிடம் இருந்து பெற்ற உதவிகள் மூலம் நவீன மாதிரிப் பாடசாலையாக மாற்றியமைக்கப்பட்டது.

அதன் விளைவாக தேசிய மட்ட 'குரு பிரபா பிரதீபா' விருதுகள் மூன்றும் மத்திய மாகாணத்தின் 'சில்பாபிமானி', 'வித்தியா செம்மல்' விருதுகளையும் பெற்றார்.

இவர் 06.04.1988 அன்று ஆங்கில உதவி ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற இவர், கட்டுகஸ்தோட்டை கல்வி வலயத்தில் அக்குறணை பங்கொல்லாமட லுக்மானியா மகா வித்தியாலயம், அக்குறணை தெலும்புகஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் என்பவற்றில் அதிபராக இருந்துள்ளார்.

இது தவிர, இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் கீழ்வரும் பல்வேறு செயற்றிட்டங்களில் பங்கு கொண்டு பேராதனை தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஊடாக அதன் நிர்வாகத்திற்கு வார இறுதி நாட்களில் பல்வேறு உதவிகளையும் புரிந்தவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தேர்தலில் வெற்றி பெற்று நிச்சயம் வீறுநடை போடுவோம்

## சு.க.வின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர் திருமுருகன் தெரிவிப்பு

(எஸ்.கணேசன்)

விழுந்தாலும் மீண்டெழக்கூடிய அரசியல் தந்திரம், மந்திரத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நன்கு கற்றே வைத்துள்ளது. குறிப்பாக 1965 இல் நடைபெற்ற தேர்தலில் பின்னடைவைச் சந்தித்த சுதந்திரக்கட்சி 1970இல் வரலாற்று வெற்றியை பதிவு செய்தது. அதுபோலவே இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஊடாக எமது கட்சி எழுச்சிபெற்று வீறுநடை போடும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளரும், சமூக சேவையாளருமான சதாநந்தன் திருமுருகன் தெரிவித்தார்.

கட்சி ஆதரவாளர்களுடன் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே திருமுருகன் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“எமது மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகின்றன. காடாக காட்சியளித்த இந்த மலையக மண்ணில் பசுமை புரட்சி செய்தனர். வீதி அமைப்பு உட்பட மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தம்மை முழுமையாக அர்ப்பணித்தனர். இதற்காக பலர் தமது உயிர்களைக்கூட தியாகம் செய்துள்ளனர். நாட்டின் பொருளாதாரத்தையே தோளில் சுமந்தனர். இன்றளவிலும் சுமந்துவருகின்றனர்.

நாட்டுக்காக முன்கள போராளிகள்போல் பாடுபட்டுவரும் மலையக மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் எமது பெருந் தோட்ட மக்கள் வஞ்சிக்கப்படுகின்றனர். அவர்களின் வாழ்க்கைத்தரம் என்பது இன்னும் மேம்படவில்லை. சிறார்கள் மத்தியில் போசாக்கின்மை பிரச்சினையும் நீடிக்கின்றது.



இனியும் இந்நிலைமை நீடிக்க இடமளிக்க முடியாது.

எனவேதான் மாற்றமொன்றை ஏற்படுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஊடாக நான் அரசியல் களம் புகுந்துள்ளேன். பல சமூகசேவைகளை செய்து, கல்வி புரட்சிமூலம் சமூகமாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றேன். அதனை அடுத்தக்கட்டம் நோக்கி கொண்டுசெல்லவே அரசியலுக்குள் வந்தேன். உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் எமது பிரதிநிதிகள் நுவரெலியா மாவட்டத்தில் கை சின்னத்தில் களமிறங்குகின்றனர்.

மலையக மக்களுக்கு நிச்சயம் நாம் கை கொடுப்போம். எமது கட்சி சின்னம்கூட கைதான்.

எமது கட்சித் தலைவர் மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த நல்லாட்சி காலத்தில்தான் மலையகத்தில் தனிவீட்டு திட்டம் முன்னெடுக்கப்பட்டது. மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டது. சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டன.

இப்படி மக்கள் துயர் அறிந்த அவர் நிச்சயம் மலையக மக்களை கைவிடமாட்டார். நாமும் அவருடன் இணைந்து மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம்.” – என்றார்.

# நுவரெலியாவில் கடத்தப்பட்ட வாகனம் பதுளையில் மீட்பு

## சந்தேக நபர்கள் இருவர் தலைமறைவு

(செ.திவாகரன்)

நுவரெலியா பிரதான நகரில் ஹற்றன் நஷனல் வங்கி முன்பாக குயின் எலிசபெத் பிரதான வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் அடையாளந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட பெஜிரோ ரக வாகனம் பதுளை திவுரும்கமவில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, நுவரெலியா பொலிஸார் மற்றும் குற்றப்பிரிவு பொலிஸார் இணைந்து திருடப்பட்ட பெஜிரோ ரக வாகனத்தை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

நுவரெலியாவில் பிரதான நகரில் ஹற்றன் நஷனல் வங்கி முன்பாக குயின் எலிசபெத் பிரதான வீதியில் நிறுத்திவைத்த இடத்தில் இருந்து பிரதான வீதி ஓரங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் உள்ள சிசிரிவி கெமரா காணொளிகளை ஆய்வு செய்து விசாரணை செய்த போது சிலர் வெளிமடை நுகத்தலாவ பிரதேசத்தில் கண்டதாக தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நுகத்தலாவ பிரதேசங்களில் உள்ள சிசிரிவி காணொளி ஆய்வு செய்து



திருடப்பட்ட வாகனம் இலக்கம் 201 திவுரும்கம நுகத்தலாவ என்ற முகவரி கொண்ட பகுதியில் நிறுத்தி வைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அப்பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் வாகனம் பழுது பார்க்கும் கடைக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்து மீட்டுள்ளனர்.

அத்துடன் அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். இந்த வாகனக் கடத்தலுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பிரதான சந்தேக நபர்கள் இருவர் தலைமறைவாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இவர்கள் இருவரையும் கைது செய்யும் நடவடிக்கைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரிக்கும் போதைப்பொருள் தொடர்பில் விசேட கவனம்

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் குணசேகர





கொவிட் தொற்றுநோயால் சிறிதளவு பின்னடைவைச் சந்தித்த போதைப்பொருள் தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் இந்த ஆண்டு அதிகரிக்கப்படுமெனவும், பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் வியாபாரம் குறித்து விசேட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் குணசேகர நேற்று (25) தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் மாவட்ட உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களின் 2022ஆம் ஆண்டின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனை வெற்றிகரமாக தொடர மாவட்ட உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்கள் பலப்படுத்தப்பட வேண்டும், எனவே, அவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் ஓர் அங்கமான மாவட்ட உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களுக்கு பாரிய பொறுப்புள்ளது - என்றார்.

# பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் கட்டளை அதிகாரிகளுக்கான விசேட மாநாடு







அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களையும் பாதிக்கும் சகல பிரச்சினைகளும் கடந்த 8 மாதங்களில் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

மாகாண ரீதியில் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் கட்டளை அதிகாரிகளுக்கான மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், பொலிஸ் உத்தியோகத்தர் தனது தொழிலின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டுமென வலியுறுத்திய அமைச்சர், போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பாதாள உலக ஒடுக்குமுறைக்கு அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பணியாற்றுவார்கள் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பொலிஸ் ஆணையாளர் சி.டி.விக்ரமரத்ன மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

# கலாநிதி நஜீப் ஹாஜியார் கலாசார மண்டப திறப்பு விழா



(பேருவளை பீ.எம்.முக்தார்)

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் தேசமான்ய கலாநிதி நஜீப் பின் அமீர் ஆலிமின் நிதியுதவியுடன் தர்கா நகர் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டப திறப்பு விழா இன்று 26ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் பி.எம்.எம்.ஜாபிர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கலாநிதி நஜீப் ஹாஜியார் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். களுத்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.இல்யாஸ் கௌரவ அதிதியாகவும் பேருவளை கெச்சிமலை அல்-அஷ்ரபியா அரபுக் கல்லூரி முதல்வரும் தர்கா நகர் தேசிய கல்வியற் கல்லூரி முன்னாள் உப தலைவருமான மௌலவி எம்.ஆர்.எம்.ஸில்மி(நூரி-அல்-அஸ்ஹரி) விசேட பேச்சாளராகவும் கலந்துகொள்வர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின்பேரில் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டடத்திற்கு 'கலாநிதி நஜீப் ஹாஜியார் கலாசார மண்டபம்' என பெயரிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவிகள், ஆசிரியர்கள், அதிபர் உட்பட ஊழியர்களுக்கு இக் கலாசார மண்டபத்தின் மூலம் தமது சமய கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்பு கிட்டுகிறது. இதன் மூலம் பாடசாலையின் முக்கிய தேவையொன்று நிறைவேற்றப்படுகிறது.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையமானது தர்கா நகர்ப் பகுதியில் கல்வி மற்றும் ஆன்மீக கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பாரிய வேலைத்திட்டங்களை கடந்த 15 வருடங்களாக முன்னெடுத்துள்ளது.

# குவைத்திலிருந்து 47 இலங்கைப் பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

நாடு திரும்பமுடியாத நிலையில் குவைத்திலிருந்த இலங்கைப் பணியாளர்கள் 47 பேர் நேற்று (25) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் 40 பேர் வீட்டுப் பணிப்பெண்களென தெரியவருகிறது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல்.230 என்ற விமானம் மூலம் மஸ்கட்டில் இருந்து இவர்கள் இலங்கை வந்துள்ளனர்.

நாடு திரும்பிய வீட்டுப் பணிப்பெண்களில் பெரும்பாலானோர் வீட்டு உரிமையாளர்களால் துன்புறுத்தலுக்கு ஆளான நிலையில் குவைத் தூதரகத்திற்கு வந்தவர்களென தெரியவந்துள்ளது.

# பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட நால்வர் வெல்லவாயவில் கைது

(கெலும் குணதிலக்க)



வெல்லவாய பிரதேசத்தில் கடந்த காலங்களில் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்களை வெல்லவாய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கையடக்கத் தொலைபேசி கடையை உடைத்து 2 இலட்சத்து 55 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான கைபேசிகளை கொள்ளையிட்டமை, நகைக் கடையை உடைத்து 72 ஆயிரத்து 850 ரூபா பணத்தை திருடியமை உள்ளிட்ட பல குற்றச் செயல்களில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்களை வெல்லவாய பொலிஸார் நேற்று முன்தினம் (24) கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 26, 17, 20 மற்றும் 23 வயதுகளையுடைய உறவினர்களாவர்.

இவர்கள் வெஹெரய டெமட் அரகம அதலிவெவ மற்றும் கொடகவெல, ஹபுகஸ்தன்ன பிரதேசங்களில் வசிப்பவர்களாவர். மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 680 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(மொனராகலை நிருபர்)

சியம்பலாண்டுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கபுர சமனலபெத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (24) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 680 கிராம் 48 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சியம்பலாண்டுவ சமனலபெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரை சியாம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# தனியார் பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த பெண் மொனராகலையில் உயிரிழப்பு

(மொனராகலை நிருபர்)

மொனராகலை - பதுளை வீதியில் பயணித்த தனியார் பஸ்ஸிலிருந்து கடந்த 22ஆம் திகதி தவறி விழுந்த பெண் மொனராகலை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (24) உயிரிழந்துள்ளதாக படல்கும்புர பொலிஸார் தெரிவித்தனர்.

ஊவடிகல்ல பனகன்னிய மெதஹின்ன பகுதியைச் சேர்ந்த இளங்பெரும ஆராச்சிகே ஞானவதி (வயது 54) என்ற பெண்ணே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர், படல்கும்புர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், தனியார் பஸ்ஸின் 43 வயது சாரதியும், 28 வயது நடத்துனரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். படல்கும்புர 12ஆம் மைல்கல் பகுதியிலுள்ள உறவினரின் வீட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்றவரே விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் மூன்று பேருடன் பதுளை நோக்கிச் செல்லும் தனியார் பஸ்ஸில் ஏறியபோதே பின்பக்கக் கதவு வழியாக பஸ்ஸிலிருந்து விழுந்துள்ளார். குறித்த பெண்ணுடன் வந்த மூவரும் பஸ்ஸில் ஏறிய பின்னர் இவர் கடைசியாக ஏறியுள்ளார்.

மேலதிக விசாரணைகளை படல்கும்புர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




**Graphic Desiginers**

Institution: Ministry of Plantation Industries (Sri Lanka Tea Board)
Required Qualification: Bachelor's Degree in information Technology/ Information Communication Technology, Minimum 01 year experience.
Age Limit: 22-45 Years
Apply: Director General
Sri Lanka Tea Board,
574, Galle Road,
Colombo 03.

**Post of Vice Chancellor**

Institution: University of Kelaniya
Apply: K.K.K. Dharmathilaka
Registrar and Secretary to the Council
university of Kelaniya
Dalugama,
Kelaniya.

**Senior Manager – Finance**

Company: IESC
Apply : https://phg.tbe.taleo.net/phg01/ats/careers/v2/viewRequisition?org=IESCORG&cws=39&rid=2198

**Teacher**

School: Wycherley International School, Gampaha.
Qualification: A high proficiency in English is expected from all candidates.
Email: meenu@wisgampaha.lk

**Store Keeper**

Company: Tess (Pvt) Ltd.
Apply: Manager Administration
Tess (Pvt) Ltd,
No 89, Nuge Road,
Kelaniya
vacancies@tess.lk

**Quality Control Officer**

Company: Ceylon Plant Food PVT Ltd
Age Limit: below 35 years
Apply: hr@ceyplalk.com





கொழும்பு மாநகர மரண விசாரணை அதிகாரியின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் குறித்து ஆராய, நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ நேற்று கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

# சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்றுகூடல் இம்முறை புதுடில்லியில்









"International Diplomats" எனப்படும் சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்றுகூடல் இம்முறை இந்தியாவின் புதுடில்லியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சர்வதேச ரீதியில் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் "International Diplomats" இன் பிரதிநிதிகளின் தலைவராகவும் மாநாட்டின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டார்.

பெரும்பாலான பிரதிநிதிகள் ஆசிய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்ததோடு, சர்வதேச நாடுகளிலிருந்தும் பல பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர். மேலும், இலங்கையிலிருந்து 4 பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கோஹ்லியின் சாதனையை முறியடித்து பாபரின் சாதனையை சமன் செய்த கில்

நியூசிலாந்து அணியுடனான ஒருநாள் தொடர் ஆட்டநாயகன் விருது வென்ற இந்திய அணியின் இளம் வீரர் சுப்மன் கில் ஒருநாள் கிரிக்கெட்டில் 3 ஆட்டங்கள் கொண்ட தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்கிற சாதனையை சமன் செய்துள்ளார். மேலும் இந்திய வீரராக அதிக ஓட்டங்கள் என்கிற விராட் கோஹ்லியின் சாதனையையும் சுப்மன் கில் முறியடித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் சுப்மன் கில் 72 பந்துகளில் சதமெடுத்தார். இது அவருடைய 4ஆவது ஒருநாள் சதம். கடந்த 4 ஒருநாள் ஆட்டங்களில் இரட்டைச் சதம் உட்பட மூன்று சதங்களை எடுத்துள்ளார்.

இந்நிலையில், 3 ஆட்டங்கள்கொண்ட ஒருநாள் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்கிற பாபர் அஸாமின் சாதனையை சமன் செய்துள்ளார். இருவரும் தலா 360 ஓட்டங்கள் எடுத்து முதலிடத்தில் உள்ளனர்.

**3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் அதிக ரன்கள்**

360 - பாபர் அஸாம் எதிர் மே.இ. தீவுகள்



360 - சுப்மன் கில் எதிர் நியூசிலாந்து

349 - இம்ருல் கைஸ் எதிர் சிம்பாப்வே

**3 ஆட்டங்கள்கொண்ட ஒருநாள் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்கள்**

360 - சுப்மன் கில் எதிர் நியூசிலாந்து 2023

357 - விராட் கோஹ்லி, ஆசியக் கிண்ணம் 2012

283 - ஷிகர் தவன் எதிர் இலங்கை, 2014

# தென்னாபிரிக்க அணியிடம் ஒரு ஓட்டத்தால் வீழ்ந்த இலங்கை



ஐ.சி.சி. இளையோர் மகளிர் உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான சுபர் சிக்ஸ் சுற்றுப்போட்டியில் இலங்கை மகளிர் அணி ஒரு ஓட்டத்தால் அதிர்ச்சித் தோல்வியை சந்தித்தது. இலங்கை அணி அரையிறுதிக்கான வாய்ப்பை ஏற்கனவே தவறவிட்டிருந்தாலும் இந்தப் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்புடன் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணிக்கு கடைசி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், இலங்கை அணியால் 10 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்ததுடன் ஒரு ஓட்டத்தால் தோல்வியை சந்தித்தது.

இலங்கை அணி மொத்தமாக 5 போட்டிகளில் விளையாடியிருந்ததுடன், அமெரிக்கா அணிக்கு எதிரான ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# நியூசிலாந்தை வைட்வொஷ் செய்து தரவரிசையில் முதலிடத்தைக் கைப்பற்றிய இந்தியா




நியூசிலாந்து அணியுடனான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 என்ற அடிப்படையில் கைப்பற்றிய இந்திய அணி, அணிகளுக்கான புதிய தரவரிசையில் மொத்தமாக 114 புள்ளிகளுடன் முதலிடத்தைக் கைப்பற்றியுள்ளது. மறுமுனையில் ஏற்கனவே முதல் இடத்தில் காணப்பட்ட இங்கிலாந்து தற்போது 113 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டிருப்பதுடன், அவுஸ்திரேலிய அணி 112 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் இந்தியாவுடன் தொடர் தோல்வியடைந்த நியூசிலாந்து அதற்கு அடுத்ததாக 111 புள்ளிகளுடன் நான்காம் இடத்திலும் காணப்படுகின்றன.

இங்கிலாந்து அணி, தென்னாபிரிக்க அணியுடன் விளையாடவுள்ள ஒருநாள் தொடரை 3-0 என கைப்பற்றும்போது மீண்டும் ஒருநாள் அணிகள் தரவரிசையில் முதல் இடம் பெறுவதற்குரிய வாய்ப்பு காணப்படுகிறது.

இதேவேளை இலங்கை கிரிக்கெட் அணி 88 புள்ளிகளுடன் 8ஆம் இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்லைன் மோசடியில் 20 கோடியை இழந்த ஐ.சி.சி.

(ரமணி)

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) ஒன்லைன் மோசடி வலையில் சிக்கி பாதிப்பை சந்தித்துள்ளது. சர்வதேச கிரிக்கெட்டை கவனிக்கும் மற்றும் நிர்வகிக்கும் உச்சபட்ச சர்வதேச கிரிக்கெட் அமைப்பான ICC ஒரு பெரும் தொகையை இழந்துள்ளது. அறிக்கை ஒன்றின்படி பிஷிங் மோசடியில் சிக்கி இன்டர்நேஷனல் கிரிக்கெட் கவுன்சில் சுமார் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்திய மதிப்பில் சுமார் ரூ.20 கோடியை இழந்துள்ளது.

இது தொடர்பாக ESPNcricinfo தெரிவித்துள்ள தகவலில், கடந்த 2022ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இந்த மோசடி நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மோசடியில் சிக்கி ICC இழந்த சரியான தொகை இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், சுமார் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசடி நபர்கள் பிசினஸ் இமெயில் காம்ப்ரமைஸ் (BEC - Business Email Compromise) டெக்னிக்கை பயன்படுத்தி ICCயிலிருந்து பணத்தை எடுத்திருக்கிறார்கள்.

இது ஈமெயில் எக்கவுண்ட் காம்ப்ரமைஸ் ஸ்கேம் என்றும் அழைக்கப்படுகிறது. முதற்கட்ட தகவலின்படி இந்த ஒன்லைன் மோசடி அமெரிக்காவிலிருந்து இயக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஏனெனில் பணம் அனைத்தும் அங்கு மாற்றப்பட்டுள்ளது. இதுபற்றி பெடரல் பீரோ ஒவ் இன்வெஸ்டிகேஷன் கூறுகையில், அனைத்து ஒன்லைன் குற்றங்களிலும் நிதி ரீதியாக மிகவும் சேதப்படுத்தும் குற்றங்களில் முக்கியமான ஒன்று என குறிப்பிடுகிறது. இந்த மோசடி குறித்து ஐசிசி இன்னும் அறிக்கை வெளியிடவில்லை.

எனினும் இந்த விஷயத்தில் பல விடை தெரியாத கேள்விகள் உள்ளன. இந்த ஒன்லைன் மோசடி எப்படி நடந்தது, மோசடி நபர்கள் துபாயிலுள்ள ஐசிசி தலைமை அலுவலகத்தைத் தொடர்புகொண்டார்களா, அல்லது வென்டார்ஃகன்சல்டன்ட் மூலமாக நடந்ததா, பரிவர்த்தனை ஒரு முறை அல்லது பல முறை செய்யப்பட்டதா என்பது பற்றிய விவரங்கள் ஏதும் வெளியாகவில்லை.

**BEC மோசடி என்றால் என்ன?**

பொதுவாக ஃபிஷிங் மோசடி என்பது ஒரு வகையான சைபர் கிரைம். இதில் மோசடி செய்பவர்கள் இமெயில், தொலைபேசி அழைப்புகள் அல்லது எஸ்எம்எஸ்கள் மூலம் குறிவைத்து நம்பகமான நிறுவனங்கள் அல்லது நபர்களைப்போல ஆள்மாறாட்டம் செய்கிறார்கள். BEC மோசடி என்பது ஒரு வகையான பிஷிங் ஆகும். இது வணிகங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகிய இரு தரப்பினரையும் குறிவைத்து முறையான பணப்பரிமாற்ற கோரிக்கைகளை அனுப்பி செய்யப்படும் மோசடியாகும்.

BEC மூலம் மோசடி செய்பவர்கள் ஒருவரை அல்லது நிறுவனங்களை ஏமாற்றி பணம் அனுப்பக் கேட்கும் போலி பில் அல்லது கோரிக்கையுடன் நம்பத்தகுந்த நபர் இமெயில் செய்வதைபோலவே மெயில் செய்து பணம் அனுப்பச் சொல்லி கேட்கிறார்கள். சுருக்கமாகச் சொல்வதென்றால் குற்றவாளிகள் இமெயிலை பயன்படுத்தி வணிக பிரதிநிதிகளாக நடிக்கின்றனர். இதை நம்பி பணம் அனுப்புவதால் போலி இமெயில் பெற்றவர்கள் கடும் நிதி இழப்புக்கு ஆளாகிறார்கள். BEC மோசடிகளைப் பற்றி விளக்கிய FBI இங்கே மோசடி செய்பவர் நம்பகமான நபராகக் காட்டிக்கொண்டு போலி பில் செலுத்துமாறு கேட்பதாக குறிப்பிட்டுள்ளது.

இந்த ICC விவகாரத்தைப் பொறுத்தவரை ஐசிசியின் டுபாய் தலைமையகத்திலுள்ள அதிகாரிகளை மோசடி நபர்கள் தொடர்பு கொண்டார்களா அல்லது ஐசிசி சேல்ஸ்பர்சன் அல்லது அட்வைசரை இலக்காக கொண்டிருந்தார்களா என தெரியவில்லை. அமெரிக்க சட்ட அமலாக்கத் துறைக்கு சந்தேகத்திற்குரிய மோசடி குறித்து ICC புகாரளித்துள்ளது மற்றும் விசாரணை நடந்து வருகிறது என ESPNcricinfo கூறியிருக்கிறது.

# புஹாரி செரீப் பாராயணம் ஆரம்பம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் பாரம்பரியமாக இடம்பெற்றுவரும் புனித புஹாரி செரீப் பாராயணம் நேற்று (25) புதன்கிழமை அதிகாலை இப்பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா (ரஷாதி) யினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது - மாளிகைக்காடு பள்ளிவாசல் மரைக்காயர்மார்கள், பொறுப்பாளர்கள், புஹாரி மஜ்லிஸ் குழுவினர், நிர்வாகிகள், ஜமாஅத்தினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# 15 வயது சிறுமி துஷ்பிரயோகம் 18 வயது இளைஞன் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 18 வயது இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (24) இரவு கைது செய்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வரும் ஒக்டோபர் மாதம் அந்தப் பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை 18 வயது இளைஞன் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில், குறித்த இளைஞன் தலைமறைவாகியிருந்துள்ளார்.

இதனையடுத்து, தலைமறைவாகிய இளைஞனை பொலிஸார் தேடிவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞனை கைது செய்ததுடன், இவரை நேற்று புதன்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டுவில் ஐஸ் போதைப்பொருளுடன் வெவ்வேறு இடங்களில் இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள புதூர் மற்றும் கருவப்பங்கேணி பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர் உட்பட இருவர் 5 கிராம் 450 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (24) இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சுற்றுச்சூழல் மற்றும் போதை ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் ரி.கிருபாகரன் உட்பட்ட பொலிஸ் குழுவினர் சம்பவதினம் இரவு புதூரில் போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டபோது போதை வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரி ஒருவரை 150 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை, கருவப்பங்கேணி பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்தை நடத்திவரும் உரிமையாளரின் வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு வியாபாரத்தில் ஈடுபட்ட கடை உரிமையாளரை 5 கிராம் 300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்தனர்.

இவ்வாறு வெவ்வேறு இடங்களில் கைதுசெய்யப்பட்ட இருவரும் நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கல்குடா முஸ்லிம்களின் வரலாற்றுத் தொகுப்பு நூல் உருவாக்க முன்னெடுப்பு




(மீராவோடை நிருபர்)

கல்குடா தொகுதி முஸ்லிம்களின் வரலாற்று தொகுப்பு எனும் நூல் ஒன்றினை தொகுத்து வெளியிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ரீ.எம்.றிஸ்வி மஜீதி தலைமையிலான குழு இந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

கல்வி, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறுபட்ட வரலாற்று தொகுப்புகள் இதில் உள்ளடக்கப்படவுள்ளன. கல்வி வரலாறு தொடர்பான தகவல் திரட்டும் பணியில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.அஸ்ரப், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஏ.காதர் ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்த ஓய்வுபெற்ற பணிப்பாளர்கள் தகவல் திரட்டும் பணியில் ஈடுபட்டனர். இதில், பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன், பகுதித் தலைவர் எஸ்.பாறூக் ஆகியோர் கலந்து கொண்டு நூல் உருவாக்கத்திற்கு தகவல்களை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தலைமைத்துவமிக்க பெண்களை அடையாளப்படுத்தும் நிகழ்வு



(கல்முனை நிருபர்)

சமாதானமும் சமூகப்பணி நிறுவனமுமானது சமூகங்களிடையே நல்லிணக்கத்தை மேற்கொள்வதற்காக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைய கல்முனை பிரதேசத்தில் நல்லிணக்கத்திற்காக சிவில் சமூக தலைமைத்துவமிக்க பெண்களை அடையாளப்படுத்தி வலுவூட்டும் நிகழ்வு கல்முனையில் நேற்றுமுன்தினம் (24) இடம்பெற்றது.

சிவில் சமூக அங்கத்தவர்கள் என்ற அடிப்படையில் கடந்த காலங்களில் தங்களின் வகிபாகம் தொடர்பிலும் தற்காலத்தில் சிவில் சமூகத்தின் வகிபாகம் தொடர்பிலும் நல்லிணக்கத்திற்கு சவாலாக காணப்படும் விடயங்களை அடையாளம் கண்டு எவ்வாறு எதிர்காலத்தில் அவற்றுக்கான சமூக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கல்முனை பிரதேச நல்லிணக்கக்குழு மற்றும் அம்பாறை மாவட்ட நல்லிணக்கக்குழு இணைப்பாளர் எஸ்.எல்.அப்துல் அஸீஸின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் டி.ராஜேந்திரன், அரச சார்பாற்ற நிறுவனங்களின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்களான கே.டி.ரோகினி, எம்.எல்.ஏ.மாஜீத் ஆகியோர் கலந்துகொண்டனர்.








உழவர் திருநாளான தைப்பொங்கல் நிகழ்வுகள் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று (25) இடம்பெற்றன. நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் மற்றும் இந்துமா மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட காரியாலய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (மத்திய முகாம் நிருபர்)

# ஏறாவூரில் சிசு சடலமாக மீட்கப்பட்ட சம்பவம்: டெங்கு ஒழிப்புப் பிரிவு உத்தியோகத்தர் கைது!

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் பிரதேசத்தில் பாழடைந்த காணியில் உயிரிழந்த நிலையில் சிசு ஒன்றை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (24) காலை மீட்டதுடன், சிசுவை பிரசவித்த 15 வயது சிறுமியையும் அவரை கர்ப்ப மாக்கிய சுகாதார டெங்கு ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றும் நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் சுகாதாரத்துறையில் டெங்கு நுளம்பு ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றிவரும் நபர், அந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு சோதனை நடவடிக்கைக்காக சென்றவேளையில், புதிய காட்டுப்பள்ளி வீதியிலுள்ள குறித்த சிறுமியின் வீட்டை சோதனை செய்யும் நடவடிக்கையின்போது சிறுமியுடன் தொடர்பு ஏற்பட்டதையடுத்து, சிறுமியை கர்ப்பமாக்கியுள்ளார்.

கர்ப்பமடைந்த சிறுமி பாடசாலை செல்வதை நிறுத்திய நிலையில் சம்பவதினம் காலை 9 மணியளவில் தனது வீட்டில் குழந்தையை பிரசவித்துள்ளதையடுத்து பிறந்த சிசுவை சிறுமியின் வீட்டின் முன்னால் உள்ள பாழடைந்த காணியில் வீசி எறிந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, குறித்த சிறுமியையும் சிறுமியை கர்ப்பமாக்கிய குறித்த 29 வயதுடைய நபரையும் கைதுசெய்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட சிறுமியை வைத்திய சாலையில் சேர்த்ததுடன் சடலமாக மீட்கப்பட்ட சிசுவை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# வேன் – பஸ் நேருக்குநேர் மோதி விபத்து: 4 மாத குழந்தை உட்பட இருவர் மரணம்

## புனானையில் சம்பவம்





(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புனானை பிரதான வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (24) மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் – சிலாபம் பகுதியிலிருந்து காத்தான்குடி நோக்கிச் சென்ற வேனும் கல்முனை பகுதியிலிருந்து பொலன்னறுவை நோக்கி பயணித்த பஸ்ஸும் நேருக்குநேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி வைத்தியசாலையின் வைத்தியர் பாத்திமா முப்லிஹா தனது குடும்பத்துடன் பயணித்த வேன் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. மகப்பேற்று விடுமுறையில் இருந்த வைத்தியர், தனது சொந்த ஊரான புத்தளம் - சிலாபத்திலிருந்து கடமையைப் பொறுப்பேற்க காத்தான்குடி வைத்தியசாலைக்கு சென்றுகொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், வைத்தியரின் நான்கு மாத ஆண் குழந்தை மஹ்தி கான் மற்றும் வைத்தியரின் மாமாவான 74 வயதுடைய ஏ.எம்.எம்.மலூசுப் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இவ்விபத்தில் படுகாயமடைந்த வைத்தியர், அவரது தந்தை உட்பட ஐந்து பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக நான்கு பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வைத்தியரின் ஒன்றரை வயது மகள் சிகிச்சையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்தில் மரணமடைந்த இருவரின் உடல்களும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தவிசாளராக அந்தோனி சுதர்சன் தெரிவு

(பாறுக் ஷிஹான்)

நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அந்தோனி சுதர்சன் 03 மேலதிக வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தவிசாளர் பதவிக்கு உறுப்பினர்களில் ஒருவரை தெரிவுசெய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில் சபை மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை(24) மாலை நடைபெற்றது.



வெற்றிடமாகியிருந்த தவிசாளர் பதவிக்கு புதிய தவிசாளரை தெரிவுசெய்வதற்கான இக்கூட்ட அமர்வில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த 13 உறுப்பினர்கள் மண்டபத்தில் சமுகமளித்திருந்தனர். இதன்போது கூட்டத்திற்கு தேவையான நிறைவெண் இருப்பதனால் கூட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்ததோடு, புதிய தவிசாளருக்கான முன்மொழிவுகளை கோரினார். இந்நிலையில், மூவர் புதிய தவிசாளர் தெரிவிற்காக சபையில் உறுப்பினர்களினால் பிரேரிக்கப்பட்டனர். இதனையடுத்து, பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது நடைபெற்ற தேர்வில் வாக்குகளை குறைவாக பெற்ற புதிய தவிசாளர் தெரிவு உறுப்பினரான திருமேனி யோகநாதன் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு ஏனைய இரு போட்டியாளர்களான த.தே.கூ. சார்பில் போட்டியிட்ட அந்தோனி சுதர்சன் மற்றும் சிவலிங்கம் குணரட்னம் ஆகிய இருவரில் புதிய தவிசாளர் பதவிக்காக தெரிவுசெய்வதற்கு மீண்டும் இரண்டாவதாக பகிரங்க வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதன்போது நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தவிசாளருக்கு சபையின் 13 உறுப்பினர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 04 உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 02 உறுப்பினர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருமாக 07 உறுப்பினர்கள் த.தே.கூ. சார்பில் போட்டியிட்ட அந்தோனி சுதர்சனுக்கு ஆதரவாக வாக்களித்து புதிய தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஒலுவிலில் சிலிண்டர் திருடிய மூவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

ஒலுவில் பிரதேசத்தில் எரிவாயு சிலிண்டர் ஒன்றை திருடிய மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒலுவில் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடையொன்றில் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர் இரவு வேளையில் காணாமல்போயுள்ளது. மேற்படி கடை உரிமையாளர் இருந்துள்ள நிலையில் மோட்டார்சைக்கிளில் வந்த மூவர் சிலிண்டரை திருடி அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள கடையொன்றில் 3 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர்.

வீட்டு உரிமையாளர் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், சந்தேகத்தின்பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் திங்கட்கிழமை (23) ஆஜர்செய்தபோது மூவரையும் எதிர்வரும் பெப்ரவரி 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தண்டப்பணம் விதிப்பு

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமில்லாமல் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திர உரிமையாளருக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை வீதி, ஆலீம் நகரில் அனுமதிப்பத்திரமில்லாமல் மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். கைப்பற்றப்பட்டிருந்த வாகனத்தை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை(24) ஆஜர்படுத்தியபோது 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்ட நெற்செய்கையில் மஞ்சள் நிறத் தாக்கம் அதிகரிப்பு

## நெல்லுக்கான விலையை அரசு தீர்மானிக்கவும் கோரிக்கை

(அக்கரைப்பற்று நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கையில் ஒருவித மஞ்சள் நிறத் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் தற்போது வேளாண்மை குடலைப் பருவமாகவும், கதிர் விரியும் நிலையிலும் இருந்து வருகிறது. இவ்வாறான நிலையில் வேளாண்மை வளர்த்தி குன்றியும் ஒருவகை மஞ்சள் நிறமாகவும் மாறி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இவை நோய்த்தாக்கமாக இருக்கலாம் எனக் கருதி பங்கசு மற்றும் கிருமிநாசினிகளை விவசாயிகள் விசிறி வருகின்றனர்.

இது தவிர அறக்கொட்டியான் பூச்சியின் நோய்த்தாக்கம், ஈ பூச்சியின் தாக்கம் என பல்வேறு நோய்கள் நெற்செய்கைக்கு ஏற்பட்டுவருகிறது. இதனால் விவசாய செய்கை பெரிதும் பாதிப்படைந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொருளாதாரப் பிரச்சினை, கொரோனா என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்திருக்கும் இவ்வேளையில், கடன்பட்டு விவசாயம் மேற்கொண்ட விவசாயிகளின் நிலை மிகவும் மோசமாகவுள்ளது. இன்னும் சில நாட்களில் அறுவடை இடம்பெறவுள்ள நிலையில் நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும் எனவும் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு தகுந்த நட்ட ஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அம்பாறை மாவட்ட விவசாயிகள் விவசாய அமைச்சர் மற்றும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



**தமிழ்க் கூட்டமைப்பு பிளவு குறித்து மக்கள் அதிருப்தியாம் எண்டு ரெலோ எம்பி செல்வத்தார் புறு புறுக்கிறாரு எலுவா?**

**அடே பதவி ஆசையில சீட் எடுக்கிற போக்குத்தாண்டாம்பி உங்கட கூத்தமைப்பு 2010 இல சைக்கிள் கஜேந்திரன் தொடக்கம் செவ்வரத்தன் பூ சுரேஷ் வரையும் பிரிந்தவங்க..**

**இப்ப உள்ளூராட்சி சப தேர்தலில ஏன்டா நீங்க ஒற்றுமையாக மூன்று கட்சியும் சேர்ந்து வேட்பாளர்கள நிறுத்தாம பங்கு கேட்டு சண்டபோட்டு பிரிந்து போட்டு யோக்கியன் மாதிரி கத உடுறயள்.**

**நீங்களும் இதற்கு காரணம்தானே என்ன நான் சொல்லுறது சரி எலுவா?**

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திறமைக்கு இடங்கொடுப்பதில்லை

## வேட்பாளர் அன்ஸார்



(பாறுக் ஷிஹான்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸிலிருந்து வெளியேறி ஐக்கிய காங்கிரஸில் இணைவதற்கு காரணம் திறமைக்கு இடங்கொடுக்கவில்லை என்பதாலேயாகும். கட்சித் தலைவர் என்பவர் திறமைகளுக்கு முன்னுரிமை வழங்கி மதிக்க வேண்டும் - என கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருமான ஏ.எல்.அன்ஸார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சமகால அரசியல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் - 2023 தொடர்பில் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (24) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் பொருளாதார ரீதியான அபிவிருத்திகளை முன்னெடுப்பதுடன் பாரிய உரிமை, இருப்பு சார்ந்த விடயங்களையும் இளைஞர்களின் வேலைவாய்ப்பினையும் முன்னெடுக்கவுள்ளோம். எம்மதமும் சம்மதம் என்ற நிலையில் எமது வேலைத்திட்டங்கள் அமையும்.

சாய்ந்தமருது சபை உருவாக்கத்திற்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி எந்த தடையும் இல்லை. இந்த விடயத்தில் கல்முனை மாநகர சபை மக்கள் ஒரு சிலரை விட எல்லோரும் தெளிவாகவே இருக்கின்றார்கள்.

ஐக்கிய காங்கிரஸ் கட்சியில் ஐக்கியம் இருக்கின்றது. என்னைப்போன்றுதான் இக்கட்சியின் கொள்கையும் இருக்கின்றது. சாய்ந்தமருது சபை உருவாக்கத்திற்கு ஐக்கிய காங்கிரஸ் கட்சி எந்த தடையும் இல்லை. இந்த விடயத்தில் கல்முனை மாநகர சபை மக்கள் ஒரு சிலரை விட எல்லோரும் தெளிவாகவே இருக்கின்றார்கள். எல்லைப் பிரச்சினைகள் மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். தலைமைகள் இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வர வேண்டும். நாங்கள் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அதிகார வர்க்கத்திடம் கெஞ்சியாவது மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்போம் - என்றார்.

குறித்த சந்திப்பில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் முன்னிலையில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தருமான ஏ.எல். அன்ஸார், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அஹமட் புர்க்கான் ஆகியோர் உத்தியோகபூர்வமாக ஐக்கிய காங்கிரஸ் கட்சியில் இணைந்துகொண்டனர்.





**தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்விசாரா உத்தியோகத்தர்களாக சேவையாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் அங்கத்தவர்களுக்கான பிரியாவிடை மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் நலன்புரி நிதியத்தினால் வழங்கப்படும் நலன்புரி நிதி வழங்கும் நிகழ்வு அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அதன் தலைவர் எம்.ரீ.எம்.தாஜுதீன் தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை காணலாம். (எம்.என்.எம்.அப்ராஸ்)**

உலக செய்திகள்



# நியூசிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்றார் கிறிஸ் ஹிப்கின்ஸ்; பிரியாவிடை பெற்றார் ஜெசிந்தா!



நியூசிலாந்தின் புதிய பிரதமராக கிறிஸ் ஹிப்கின்ஸ் நேற்று பதவி ஏற்றுக்கொண்டுள்ளார். இதேவேளை, தமது பதவியை இராஜினாமா செய்த முன்னாள் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் நாட்டு மக்களிடையே பிரியாவிடை பெற்றுக்கொண்டார்.

''நாட்டின் தலைமைப் பொறுப்பை வகித்தது தனக்குக் கிடைத்த மிகப் பெரிய பெருமை'' என நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

வெலிங்டனில் ஆளும் தொழிலாளர் கட்சி நடத்திய கூட்டத்தில் புதிய பிரதமராக தெரிவுசெய்யப்பட்ட கிறிஸ் ஹிப்கின்ஸ் மற்றும் பிற எம்.பிக்களுடன் பங்கேற்ற ஜெசிந்தா ஆர்டெர்ன் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

''எனது இராஜினாமா குறித்து எதிர்மறைக் கருத்துகளை யாரும் பரப்ப வேண்டாம். மனநிறைவுடன்தான் இந்தப் பணியிலிருந்து விலகுகிறேன். புதிய பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸ் எனது 20 ஆண்டுகால நண்பர். தகுதிவாய்ந்த கரங்களில் நாட்டை ஒப்படைத்துச் செல்வதில் மகிழ்ச்சியடைகிறேன்'' - என்றார்.

கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து நியூசிலாந்தின் பிரதமராக இருந்துவரும் ஜெசிந்தா ஆர்டெர்ன், தனது பதவியை இராஜினாமா செய்வதாக கடந்த வியாழக்கிழமை திடீரென அறிவித்து நாட்டு மக்களை அதிர்ச்சியடையச் செய்தார்.

பிரதமர் பதவியை வகிப்பதற்கான சூழல் தனக்கு இனிமேல் இல்லை என்பதை உணர்ந்ததால் அந்தப் பதவியிலிருந்து விலக முடிவு செய்ததாக ஜெசிந்தா தெரிவித்தார்.

நியூசிலாந்து பிரதமராக ஜெசிந்தா பதவியேற்றபோது அவருக்கு 37 வயது. அப்போது, ஒரு நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்ற உலகின் மிக இளைய வயது பெண் என்ற பெருமையை ஜெசிந்தா பெற்றார்.

மிகக் கடுமையான கொரோனா நெருக்கடி, நாடு அதுவரை சந்தித்திராத மிக மோசமான கிறைஸ்ட்சேர்ச், மசூதித் தாக்குதல், பொருளாதார நெருக்கடிக்கு இடையே அவர் நாட்டை சிறப்பாக வழிநடத்திச் சென்றதாக பாராட்டப்பட்டார்.

எனினும், பெண் என்பதாலும், பிற காரணங்களுக்காகவும் தொடர்ந்து நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு வந்ததால்தான் அவர் இராஜிநாமா செய்ததாகக் கூறப்பட்டது.

அதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் ஜெசிந்தா இவ்வாறு தெரிவித்தார்.

## ஒஸ்கர் இறுதிப்பட்டியலில் 'நாட்டு நாட்டு...' பாடல்




ஒஸ்கர் விருதுக்கான இறுதிப் பரிந்துரைப் பட்டியலில் சிறந்த ஒரிஜினல் பாடலுக்கான பிரிவில் ஆர்.ஆர்.ஆர். படத்தின் ''நாட்டு நாட்டு....'' பாடல் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்சில் மார்ச் 13ஆம் திகதியன்று ஒஸ்கர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

அதற்கான இறுதிப் பரிந்துரை பட்டியலில், ஏற்கனவே கோல்டன் குளோப் விருதை வென்ற ''நாட்டு நாட்டு...'' பாடல் உட்பட 5 பாடல்கள் சிறந்த பாடல்கள் பிரிவில் இடம்பெற்றன.

அதேபோல், சிறந்த ஆவணக் குறும்படத்திற்கான பரிந்துரை பட்டியலில், தெப்பக்காடு யானை பராமரிப்பு தம்பதியின் கதையான 'தி எலிபெண்ட் விஸ்பர்ஸ்' இடம்பெற்றது.

இயக்குநர் ஷானக் செனின் 'ஆல் தட் பிரீத்ஸ்'- சிறந்த ஆவணப்பட விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## ஜெயலலிதாவின் சொத்துகளை முறைப்படி ஏலம் விட நடவடிக்கை எடுக்கவேண்டும்

### கர்நாடக அரசுக்கு பெங்களூர் நீதிமன்றம் உத்தரவு



மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்துகளை முறைப்படி ஏலம் விட நடவடிக்கை எடுக்க வேண்டுமென கர்நாடக அரசுக்கு, பெங்களூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான பல கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகள், நகைகள், செருப்புகள், சேலைகள் கடந்த 27 வருடங்களாக கர்நாடக கருவூலத்தில் உள்ளன.

அவற்றை ஏலம் விடுவது தொடர்பான வழக்கு விசாரணை பெங்களூர் முதன்மை மாநகர சிவில் மற்றும் செசன்ஸ் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ராமச்சந்திர டி.ஹுத்தார், கர்நாடக உயர் நீதிமன்றம் மற்றும் நீதித்துறை உடனடியாக சிறப்பு வழக்கறிஞரை நியமித்து அனைத்து சொத்துகளையும் ஏலம் விட்டு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய 4 பேருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதில் ஜெயலலிதா மறைந்துவிட்டார். மற்ற மூவரும் கர்நாடக சிறையில் அடைக்கப்பட்டனர். தண்டனை காலம் முடிந்த பின்னர் 3 பேரும் விடுதலையாகி வெளியே வந்தனர். இந்த வழக்கு விசாரணையின்போது, ஜெயலலிதாவின் வீட்டிலிருந்து 27 வகையான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அதில் 11 ஆயிரத்து 344 விலையுயர்ந்த பட்டுச் சேலைகள், சால்வைகள், 750 ஜோடி செருப்புகள், 250 சால்வைகள் ஆகிய பொருட்களும் அடங்கும். இவை கடந்த 2011ஆம் ஆண்டுமுதல் கர்நாடக அரசின் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஜெயலலிதாவின் சொத்துகளில் புடவைகள், காலணி, சால்வைகள் ஆகியவற்றை ஏலம் விடும்படி கோரி வழக்கறிஞர் நரசிம்மமூர்த்தி என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார்.

பெங்களூர் சிட்டி சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நிராகரிக்கப்பட்டதையடுத்து நரசிம்மமூர்த்தி மேன்முறையீடு செய்தார். இந்த மனு நீதிபதி ராமச்சந்திர டி.ஹுத்தார் அமர்வில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது பல ஆண்டுகளுக்கு முன் பறிமுதல் செய்த பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சரியானது என நீதிபதி தீர்ப்பளித்தார்.

கர்நாடக சிறப்பு நீதிமன்றத்திலுள்ள ஜெயலலிதாவின் சொத்துகளை முறைப்படி ஏலம் விட நடவடிக்கை எடுக்க வேண்டும். சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சொத்துகளை ஏலம் விட சிறப்பு வழக்கறிஞரை நியமிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

## ஜப்பான் - தென்கொரியா இடையே கடலில் மூழ்கிய சரக்குக் கப்பல்

### கடும் குளிருக்கு மத்தியில் 13 பேர் மீட்பு; 9 பேர் மாயம்




தென்மேற்கு ஜப்பானில் சரக்குக் கப்பலொன்று கடலில் மூழ்கிய விபத்தில் கடலில் தத்தளித்த 13 பேரை, கடும் குளிருக்கு மத்தியில் தென்கொரியா மற்றும் ஜப்பான் கடலோரக் காவல்படையினர் மீட்டுள்ளனர். 9 பேர் மாயமான நிலையில் அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் நாகசாகி மற்றும் தென்கொரியாவின் ஜெஜு தீவுக்கு இடையே நேற்றுமுன்தினம் இரவு சரக்குக் கப்பலொன்று மூழ்கியது.

மொத்தம் இருந்த 22 ஊழியர்களில் 13 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில், காணாமல்போன 9 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## வடகொரியாவில் கொரோனா பரவல் தீவிரம்: ஊரடங்கு அமுல்



வடகொரியாவில் கொரோனா பாதிப்பு அதிகரிப்பால் தலைநகர் பியோங்யாங்கில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வடகொரியா தலைநகர் பியோங்யாங்கில் காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் நோயால் பாதிக்கப்படுவோர் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், ஞாயிற்றுக்கிழமைவரை வீட்டைவிட்டு எவரும் வெளியே வரவேண்டாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

பியோங்யாங் முழுவதும் 5 நாட்களுக்கு பொதுமுடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மக்கள் வீட்டைவிட்டு வெளியே வராமல் வெப்பநிலையை பரிசோதனை செய்யவும் அரசு உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பியோங்யாங் நகரை தொடர்ந்து வடகொரியாவின் பல்வேறு பகுதிகளில் அடுத்தடுத்து பொதுமுடக்கம் அமுல்படுத்த வாய்ப்புள்ளதாகவும் தெரிகிறது.

## அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற ஹெய்ட்டி அகதிகள் 396 பேர் மடக்கிப்பிடிப்பு



அமெரிக்க கடலோர காவற்படை ரோந்து பொலிஸார் அதிவேக படகில் சென்று மடக்கிப்பிடித்துள்ளனர்.

ஹெய்ட்டியிலிருந்து அமெரிக்கா நோக்கி 396 அகதிகளை ஏற்றிச்சென்ற படகை அமெரிக்க கடலோரப் பாதுகாப்புப் படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர். அவர்களை மீண்டும் ஹெய்ட்டிக்கு அனுப்பிவைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரீபியன் தீவு நாடான ஹெய்ட்டியில் வறுமையும் - வன்முறையும் அதிகரித்ததால் வாழ்வாதாரத்தைத் தேடி ஏராளமானோர் மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவில் தஞ்சமடைய ஆபத்தான கடற்பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறு, ஹெய்ட்டியிலிருந்து பஹாமாஸ் வழியாக அகதிகளுடன் சென்ற படகொன்றை, கண்ட

## ஆப்கானை வாட்டும் குளிர்; 150 பேர் பலி



ஆப்கானிஸ்தானில் கடந்த 2 வாரங்களாக நிலவிவரும் மிகக் கடும் குளிரால் இதுவரை 150 பேர் உயிரிழந்துள்ளதுடன் 70ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தன்னார்வ தொண்டு அமைப்புகளில் பெண்கள் பணியாற்றுவதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பேரிடர் காலங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய பல தொண்டு அமைப்புகள் தங்களது நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளன.

இதுவும் குளிருக்கு உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிக காரணம் என தெரிவிக்கப்படுகிறது. இருந்தாலும், தொண்டு நிறுவனங்களில் பெண்கள் பணியாற்ற விதிக்கப்பட்டுள்ள தடை தொடரும் என்று தலிபான்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

## இம்ரான் கட்சியிலிருந்து 43 எம்.பிக்கள் இராஜினாமா



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் கட்சியிலிருந்து மேலும் 43 எம்பிக்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான்கான் பதவி பறிக்கப்பட்ட பின்னர் அங்கு அவரது தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சி எம்.பிக்கள் தங்கள் பதவியை தொடர்ந்து இராஜினமா செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு ஜூலையில் 123 எம்.பிக்கள் இராஜினாமா செய்தனர். அதில் 11 பேரி இராஜினாமா மட்டுமே ஏற்கப்பட்டது. கடந்த வாரம் 70 எம்.பிக்களின் இராஜினாமா ஏற்கப்பட்டது. தற்போது மேலும் 43 எம்.பிக்களின் இராஜினாமா நேற்றுமுன்தினம் ஏற்கப்பட்டதாக அந்நாட்டு பாராளுமன்ற சபாநாயகர் ராஜா பெர்வியாஸ் அஷ்ரப் அறிவித்துள்ளார்.

## டெக்சாஸை புரட்டிப்போட்ட சூறாவளி: மின் - போக்குவரத்து துண்டிப்பு; மக்கள் அவதி



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை அதிபயங்கர சூறாவளி தாக்கியது.

மணிக்கு 64 கிலோமீற்றர் வேகத்தில் சுழன்றடித்த சுழல் காற்றில் சிக்கி வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள், மின் கம்பங்கள் என அனைத்தும் துவம்சம் செய்யப்பட்டன. மரங்கள் முறிந்து வீழ்ந்து வீதிகளை முடக்கின. பலத்த காற்றால், நெடுஞ்சாலயில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் வீதித் தடுப்புகள் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களின் மேற்கூரைகள் பல மைல் தொலைவுக்கு தூக்கி எறியப்பட்டன. மேலும், சூறாவளி காற்றில் சிக்கி மின்கம்பங்களும் சாய்ந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கியுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7